# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 44 ● 12 டிசம்பர் 1970 ● பக்கங்கள் ● விலை சதம் 15


### மாசேதுங் சிந்தனை

மக்களுக்குப் பொறுப்புடையவர்களாய் இருப்பது நமது கடமை. ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு கொள்கையும் மக்களின் நலன்களுக்கு இசைவாக இருக்க வேண்டும். தவறுகள் நேர்ந்தால், அவை திருத்தப்படவேண்டும்—மக்களுக்குப் பொறுப்புடையவர்களாய் இருப்பதன் அர்த்தம் இதுவேயாகும்.

# போப்பின் வருகைக்கு விரயமான செலவு எவ்வளவு?

**முதலாவது பண்டாரநாயக்கா அரசாங்கத்திலும் இது நடந்திருக்க முடியாது; இரண்டாவது பண்டாரநாயக்கா அரசாங்க காலத்தில் கூட இது நடந்திருக்க முடியாது. அப்படி நடந்திருந்தால் பௌத்த மக்கள் மத்தியிலிருந்து பலத்த எதிர்ப் பொலி கிளம்பியிருக்கும். கத்தோலிக்க ஆதரவானதென்றும், பௌத்த எதிர்ப்பானதென்றும் குற்றஞ்சாட்டப்படும். யு. என். பி. கூட, பாப்பாண்டவரின் வருகையில் இவ்வளவு பரபரப்பை உண்டாக்கத் துணிந்திருக்காது. ஆனால், இன்று மார்க்சிஸ்டுகள் என்ற வேட்டிலே ஒட்டிக்கொண்டுள்ள மந்திரிமார்கள் அங்கம் வகிக்கும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணியின் கீழ் இது நடந்திருக்கிறது.**

சிறந்த பௌத்த நாடு என்று சொல்லப்படும் இலங்கை, கடந்த வாரம், கத்தோலிக்க பாப்பாண்டவரை வரவேற்பதிலும் உயர்ந்த மரியாதை அணிவகுப்பைச் செலுத்துவதிலும், அதி தீவிர கத்தோலிக்க—கிறிஸ்துவ நாடுகளையும் மிஞ்சிவிட்டது. இது, கத்தோலிக்க திருச்சபையினதும், எல்லாவிதமான அடிப்படை சக்திகளையும் ஒன்று திரட்டுவதற்கு அரசாங்கம் இட்ட உத்தரவினதும், கூட்டு முயற்சியாகும். இதுபோன்ற கூட்டு முயற்சி—அதாவது, வானொலி, பத்திரிகைபோன்ற பரந்த பிரச்சார இயந்திரங்களும், ரயில், பஸ், விமான சேவை போன்ற போக்குவரத்துச் சாதனங்களும், பொலிஸ், ராணுவம், விமானப்படை ஆகியவற்றின் அநேகமான பகுதிகளும் ஒரேயொரு காரணத்திற்காக—இலங்கை மக்களில் 8 சத வீதத்தினரின் ஆத்மீகத் தலைவருக்கு மபெரும் வரவேற்பளிப்பதற்காக ஒன்றுக இயக்கப்பட்டது இது தான் முதல் தடவை.

இது சந்தேகத்திற்கிடமின்றி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினுல், கத்தோலிக்க வாக்காளர்கள் மத்தியில் தமது நிலையை ஸ்திரப்படுத்துவதற்கும், அவர்களின் பாரம்பரிய யு. என். பி. விசுவாசத்தை தகர்த்தெறிவதற்கும் கையாளப்பட்ட ஒரு தந்திரமாகும். இந்த முயற்சியில் அரசாங்கம் ஓரளவு வெற்றிகண்டுள்ளது உண்மைதான். அரசாங்கம் கத்தோலிக்கர்களின் ஆசியைப் பெறுவதில் ஓரளவு வெற்றிபெற்றுள்ளது என்பதை, யு. என். பி. யின் பாரிஸ் பெரேரா பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சின் நன்றியுரை காட்டுகிறது. ஆனால், தமது மதத்தின் புராதன பெருமை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையில் வாக்களித்த பௌத்த மக்களின் நிலை என்ன?

நிதியமைச்சர் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய இக்கால கட்டத்தில், இந்த வரவேற்புக்கு செலவிடப்பட்ட தொகை நியாயமானதா? கத்தோலிக்கரிலும் பார்க்க விகிதாசாரத்தில் கூடிய வேறு எந்த மதத்தவரின் மத வைபவங்களுக்கு இதுபோன்ற தொகையோ, இதனிலும் பார்க்க கூடிய தொகையோ இதற்கு முன் செலவிடப்பட்டதா?

கத்தோலிக்க பாப்பாண்டவரை வரவேற்றதில் அரசாங்கம் கத்தோலிக்கர்களின் ஆத்மீகத் தலைவரை மட்டும் வெறுமனே வரவேற்கவில்லை. சொந்தப் பிரதேசம், ஆயுதப் படைகள், தனக்கென சொந்த வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றை வைத்திருக்கும் வத்திக்கான் ராஜ்யத்தின் லௌகீகத் தலைவரையும் வரவேற்றிருக்கிறது என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். முதலாளித்துவம், பாசிஸம், காலனியாதிக்கம் ஆகியவற்றிற்கு உதவுவதில் ஒரு ஆத்மீகக் கருவி என்று சரியாக கணிக்கப்பட்ட வத்திக்கான் அரசு, உலகில் உள்ள பிற்போக்கு அரசுகளில் மிகவும் படுமோசமான ஒரு பிற்போக்கு அரசு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பாசிஸ்டுகளான ஹிட்லர். முசோலினி போத்துக்கலின் சலாசர், கியூபாவின் படிஸ்டா, தென்வியட்நாமின் நோடின் டாம், ஸ்பெயினின் பிராங்கோ போன்ற படு பிற்போக்கு, பாசிஸ்ட் கும்பலுக்கு உதவி செய்ததிலும், உதவி செய்வதிலும் வத்திக்கானுக்கு இறுக்கமான தொடர்புண்டு என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

# தொகையை யார் கணக்கில் எழுதுவது?

இலங்கையின் கத்தோலிக்க மதபீடம் பிற்போக்கின் உண்மையான ஒரு அவதாரம் என்பது மட்டுமல்ல, இடதுசாரி இயக்கத்துக்கும், சோஷலிஸக் கொள்கைகளுக்கும் எதிராக முன்னணியில் நின்று போராடும் ஒரு ஸ்தாபனமாகும். இது, யு. என். பி. யின் ஒரு [illegible]கையாக இருந்ததோடு, பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட எந்தவொரு முற்போக்கு திட்டத்தையும் எதிர்த்து வந்துள்ளது, சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவினுல் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வித்திட்டத்தை இது எதிர்த்ததோடு, பாடசாலைகளை அரசாங்கம் எடுத்த நடவடிக்கையிலும், பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து, ஆர்ப்பாட்டங்களையும் ஒழுங்கு செய்தது. சீனுவுடனை ரப்பர் - அரிசி ஒப்பந்தத்தை எதிர்த்ததோடு, நெற்காணிச் சட்டத்தையும் கூட எதிர்த்தது. வெளி நாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை காலஞ்சென்ற பண்டாரநாயக்காவினுல் கைக்கொள்ளப்பட்ட கூட்டுச்சேராக் கொள்கையையும் எதிர்த்தது, அதே சமயம், யு. என். பி. யின் மேற்கு நாட்டுக்கு ஆதரவான வெளிநாட்டுக் கொள்கைக்கு [illegible] ஆதரவு அளித்தது. 23 வது ஜோன் வத்திக்கான் பீடத்தில் அமர்ந்தபின்பு அதன் கொள்கைகளில் தாக்கமான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று நம்புகிறவர்களுக்கு நாம் சொல்வது என்னவென்ருல், 6 வது பாப்பாண்டவர், தமது ஆசிய விஜயத்தின்போது கம்யூனிஸத்தின் இன்னொரு பெயரான பொருள் முதல் வாதத்தை கண்டிக்கத் தவறவில்லை என்பதுதான். முன்பே தயாரிக்கப்பட்ட அவருடைய கடுமையான சீன எதிர்ப்புப் பேச்சு, ஹொங்கொங்கின் அரசியல் நிர்ப்பந்தத்தினுல் தான் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் ஹொங்கொங்கில் அரசியல் எதிர்ப்பை எதிர்பார்த்ததே இதற்குக் காரணம்.

தம்மை பொருள் முதல் வாதிகள் என்றும், கத்தோலிக்க பிற்போக்கின் கடைசி வார்த்தை வத்திக்கானே என்றும் கண்டித்த சமசமாஜிகளும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் பாப்பாண்டவரின் படத்தை தமது பத்திரிகைகளில் பிரசுரிப்பதிலும், அவரை வரவேற்பதிலும் எல்லாவகையிலும் முன்னணியில் நின்றது போன்ற துர்நாற்றம் வீசும் செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் இதையும் விட வேறு இழிநிலைக்குப்போக முடியுமா?

திரிபுவாதக் கந்தல் ஏட்டில் முன்வைக்கப்பட்ட வாதம் மிகவும் ருசிகரமானது. கத்தோலிக்கர்களுக்கும் மார்க்சியவாதிகள் என்று சொல்லப்படுகிறவர்களுக்குமிடையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு சிலநாடுகளில் ''பலன்'' அளித்துள்ளதாக கூறப்படும் பேச்சுவார்த்தைகளை பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் பெரிதும் துரிதப்படுத்தும் என்று திரிபுவாதிகள் வாதிக்கிருர்கள். சோவியத் ஜனதிபதி பொட்கர்னியினதும், வெளிநாட்டு அமைச்சர் குரோமிக்கோவினதும் வத்திக்கான் விஜயத்தையும், இத்தாலிய கத்தோலிக்கர்களுக்கும், இத்தாலிய திரிபுவாதிகளுக்குமிடையேயுள்ள நல்லுறவுகளையும் இதற்கு உதாரணமாக இவர்கள் காட்டுகிருர்கள்.

வத்திக்கானுக்கும், திரிபுவாதிகளுக்குமிடையேயுள்ள உறவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. இது, வத்திக்கான் தனது கம்யூனிஸ எதிர்ப்பைக் கைவிட்டுள்ளது என்பதைக் குறிக்கிறதா, அல்லது நவீன திரிபுவாதிகள் கம்யூனிஸத்தை ஸ்தாபிக்கும் தமது இலக்கிலிருந்து விலகிவிட்டார்கள் என்பதைக் குறிக்கிறதா? இது இரண்டாவதைத்தான் குறிக்கிறது. நவீன திரிபுவாதிகள்தான் துரோகிகளாகிவிட்டார்கள் — வத்திக்கான் அல்ல.

கத்தோலிக்க பிற்போக்குக்கு ஆதரவானது என்று தாக்கப்

8-ம் பக்கம் பார்க்க.

நம்மைச் சுற்றி > நவம்

# சீ.ஐ.ஏ.க்கு மறைமுகமாக உதவுபவர்கள் யார்?

சீ. ஐ. ஏ. என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மத்திய உளவு ஸ்தாபனம். ஏகாதிபத்திய விரோத அரசாங்கங்களை கவிழ்ப்பதும், ஏகாதிபத்தியத்திற் கெதிரான எழுச்சிகளையும் புரட்சிகளையும் நசுக்குவதும்தான் இதன் முக்கிய குறிக்கோள்.

முக்கூட்டணி அரசாங்கத்தின் சில பகுதிகள், குறிப்பாக ''நேசன்'' (Nation) பத்திரிகையைச் சார்ந்துள்ளவர்களும், திரிபுவாதிகளும் அரசாங்கத்திற் கெதிராக எழும் ஒவ்வொரு குரலும் சீ. ஐ. ஏ. யினது குரல் எனப் பிரச்சாரம் செய்கிறார்கள். கட்டுப் பெத்த மாணவர்கள் போராட்டம், சர்வ கலாசாலை மாணவர்களுக்கும், தேர்டஸ்சன் கல்லூரி மாணவர்களுக்கு மிடையில் தொடங்கி பொலிஸிற்கெதிராக நடந்த போராட்டம்; பதியுதீனால் முஸ்லிம் சமூகத்தின் பெரும் புள்ளிகளுக்கு அளிக்கப்பட்ட தேனீர் விருந்தின் போது நடந்தவை பற்றி ஹலீம் இஸாக் விட்ட அறிக்கை போன்ற எல்லா நடவடிக்கைகளும் சீ. ஐ. ஏ. யினது செயல்களாகும்.

சீ. ஐ. ஏ. இந்த அரசாங்கத்தை கவிழ்க்கும் விதத்தில் செயல்படுவதற்கு, இந்த அரசாங்கம், குறிப்பாக சமசமாஜிகளும், திரிபுவாதிகளும் இதுவரை எடுத்த ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகள் என்ன? சில நாடுகளுடன் தூதராலயத் தொடர்புகளை ஏற்படுத்துவதுடனும், சில நாடுகளுடன் இத்தொடர்புகளைத் துண்டிப்பதுடனும், ஐ. நா. விலும், லுசாக்காவிலும் பேசுவதுடனும் எமது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முடித்துவிட முடியாது, எமது பொருளாதாரத்தை ஏகாதிபத்தியத்தின் அழுங்குப் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் எமது ஏகாதிபத்திய எதிர்ப்பு கணிக்கப்படும். 1963ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வெளி நாடுகளுக்கு லாபத்தை அனுப்புவதற்கு விதிக்கப்பட்ட தடை கூட, மே மாதப் ''புரட்சியின்'' பின் வந்த வரவு செலவுத் திட்டத்தில் இல்லை. இப்படியாக நடவடிக்கைகள் எடுக்காதவரைக்கும், சீ.ஐ.ஏ.க்கு அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டிய அவசியமில்லை. ஏகாதிபத்தியம் இந் நாட்டை சுரண்டுவதற்கு தடை இல்லாதவரைக்கும், டட்லி ஆண்டாலென்ன, ஸ்ரீமாவோ ஆண்டாலென்ன, சீ. ஐ. ஏ. கவலைப்படப் போவதில்லை.

நிலைமை இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கெதிராக எழும் குரல்களெல்லாம் சீ. ஐ. ஏ. யினது செயல் என்பது ஓநாய்! ஓநாய்! என்று கத்திய மாடு மேய்க்கும் சிறுவனுடைய கதைபோலத்தான் முடியக் கூடும், சீ. ஐ. ஏ. பூச்சாண்டியைக் கேட்டு அலுத்துப் போகும் மக்கள், 'சீ. ஐ. ஏ. என்று ஒன்றில்லை, அது அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் பட்டப் பெயர் என்ற முடிவுக்கு வந்துவிட்டால், அதை விடச் சிறந்த உதவியை எவரும் சீ. ஐ. ஏ. யிற்கு செய்ய முடியாது.

அரசாங்கத்தின் சீ. ஐ. ஏ. பூச்சாண்டி மக்களை திசை திருப்ப முயலுகிறது. ஆனால் அதே நேரம் சீ. ஐ. ஏ. யின் நாசகார வேலைகளுக் கெதிராக மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும். அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டிய அவசியம் சீ. ஐ. ஏ.க்கு இல்லாவிட்டாலும், இந் நாட்டின் ஏகாதிபத்தியத்திற் கெதிராக வளரும் எழுச்சிகளையும் புரட்சிகர சக்திகளையும் நசுக்குவதில் சீ. ஐ ஏ. பல விதமான வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. சீ. ஐ. ஏ. ஆசியா பவுண்டேசன், சமாதானப் படை போன்ற அமெரிக்க ஸ்தாபனங்களினூடாக மட்டும் இயங்குவதில்லை. ஜெர்மன் (மேற்கு) ஈபட் பவுண்டேசன் -இதன் பல்லடுக்கு மாடி வீட்டுக் காரியாலயம் சீமெந்துக் கூட்டுத் தாபனத்துக் கருகாமையில். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.- போன்ற ஸ்தாபனங்களும், அரசு யந்திரத்தின் பல பகுதிகளும் சீ. ஐ. ஏ. யின் நாசகார வேலைகளுக்குத் தளமாக உள்ளன. உல்லாசப் பிரயாணிகளாக வருபவர்களில் பலர் உளவு வேலைகளிலும், கள்ளக் கடத்தலிலும் சம்பந்தப்பட்டவர்கள். ஏகாதிபத்தியத்தின் கையில் எமது பொருளாதாரம் இருக்கும் வரையில் சீ. ஐ. ஏ. வேலை செய்வதற்குத் தேவையான பணமும் கிடைத்துக் கொண்டே இருக்கும். எனவே சீ. ஐ. ஏ. இந் நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் செய்தற்கு ஏகாதிபத்திய வாதிகளின் அழுங்குப் பிடியிலிருந்து இந்நாட்டுப் பொருளாதாரம் விடுதலையாக்கப்பட வேண்டும்.

★

## உலக வங்கிக்கு துதி பாடுகிறார்கள்

சீ.ஐ.ஏ. பூச்சாண்டிகாட்டும் கூட்டரசாங்கத்தினர், ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து எமது பொருளாதாரத்தை விடுதலை செய்யும் முயற்சிகளுக்குப் பதில் மேலும் ஏகாதிபத்தியத்தின் பிடியை இறுகச் செய்யும் விதத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். உலக வங்கிக்கு வருங் காலச் சந்ததியினர் அடவு வைக்கப்படுவதாகத் தேர்தலுக்கு முன் கூறிய கூட்டாட்சியினர் அதே உலக வங்கியுடன் பேரம் பேசுகின்றனர். உலக வங்கி மனம் மாறிவிட்டதா அல்லது கூட்டாட்சியினர் கொள்கை மாறிவிட்டதா என்பது ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் தெரியவரும். 1963ம் ஆண்டு-வரவு செலவுத் திட்டம் செய்ததுபோல வெளி நாடுகளுக்குச் செல்லும் லாபத்திற்குத் தடை செய்யாமலும், தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தபோதும், வங்கிகளைத் தேசிய மயமாக்காது விட்டதும், உலக வங்கியை சந்தோஷப்படுத்துவதற்காகவே. இவற்றுடன் என்.எம். பெரேரா உலக வங்கியின் மாநாட்டில் துதிபாடியதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இவர்கள் ஒரு போதும் ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுக்க மாட்டார்களென்பது தெளிவாகிறது.

★

## இதுதான் தங்க மூளையா?

பழைய 100 ரூபா, 50 ரூபா நோட்டுகளுக்குப் பதில் புதிய நோட்டுகளை புளக்கத்துக்குக் கொண்டு வந்ததும், கூட்டாட்சியினர், குறிப்பாக சமசமாஜிகள், ''என். எம். உண்மையில் தங்கமூளைதான்'', ''இந்த நூற்றுண்டில் சிறந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்'' ''பல கோடி ரூபாய்கள் கடத்தப்பட்டு வெளி நாடுகளில் பதுக்கப்பட்டிருக்கின்றன. அவை இந் நாட்டிற்குள் வராமல் கண்காணிக்படுகின்றன'' ''தொடர்ச்சியான வரிக்கு அஞ்சி பல கோடி ரூபாய்கள் எரிக்கப்பட்டுள்ளன'' என்றெல்லாம் வீரம் பேசினர். ஆனால் மத்தியவங்கி கணக்குகளின் படி ஒரு கோடி ரூபா பெறுமதியான பழைய நோட்டுகள் தான் வங்கிகளில் ஒப்படைக்கப்படவில்லை யென்று, இம் மாதம் முதலாம் திகதி பத்திரிகைக் செய்தி ஒன்று கூறுகிறது. மேலும் அச் செய்திப்படி அன்று வரை பெறப்பட்ட வரி அரைக் கோடி ரூபாவையும் தாண்டவில்லை. / வரித் திணைக்களத்தின் உயர் உத்தியோகத்தர்கள், வரி செலுத்துவோர் எதிர்ப்புத் தெரிவிக்காதபடி மதிப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கும் பொழுது நிலைமை வேறுவிதமாக இருக்க முடியாது. பாராளுமன்றத்தில் என். எம். பெரேரா அழாக் குறையாகக் கூறியதை ஒரு பத்திரிகை நிருபர் கூறிய வண்ணம் கீழே குறிப்பிடுகிறோம்.

''மத்திய வங்கியைப் பற்றி எனக்குத் திருப்தியில்லை. நோட்டுக்கள் மாற்றத்தைப் பற்றி அவர்கள் எனக்கு வேறுபாடான கணக்குகளைக் கூறியுள்ளார்கள். இதன் பலனுக நான் ஒரு முட்டாளாக்கப்பட்டேன்.''

மந்திரியாவதற்கு முன் மத்திய வங்கியைப் பலமுறை (சரியாக) திட்டியவர்- வரவு-செலவு திட்டம் தயாரிக்கும் பொழுது நம்பிக்கை வைத்ததேன்?

''முக்கூட்டணியே வேலை கொடு'' என்று கேட்கும் இலட்சக் கணக்கானவர்களுக்கு ''நான் ஒரு முட்டாளுங்க'' என்று தான் பதில் கிடைக்கும் போலத் தெரிகிறது.

தங்க மூளை களிமண்ணுகி விட்டது.

★

## முதலாளித்துவப் பத்திரிகையின் சொந்தத் தணிக்கை?

6. 12. 70ம் திகதி டெயிலி நியூஸ், பாப்பாண்டவரைக் கொலை செய்ய எடுக்கப்பட்டதாகக் கூறப்படுப் ஒரு முயற்சிக்கு முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் கூறும் போது, பாதுகாப்பு காரணங்களுக்காக இச் செய்தியை இதற்கு முன்பு வெளியிடவில்லையென்றும், இனிமேல் கூறலாம் என்றும் தனது சொந்தத் தணிக்கையைப் பற்றி புளுகியுள்ளது.

பாப்பாண்டவர் வருவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு (அதாவது 4.12.70 வெள்ளிக்கிழமை மாலை) உபசேனுஎன்ற வங்கிக்கிளார்க்கை கைது செய்யும்படி அபாய அறிவிப்பு எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டதாக அதே செய்தியில் குறிப்பிட்டுள்ளது. எனவே, இச்செய்தி பாப்பாண்டவர் வந்த தினத்தன்று பத்திரிகைகளில் வந்திருக்க முடியாது. பாப்பாண்டவர் 3 மணித்தியாலங்கள் தான் தங்கியிருந்தபடியால், மறுநாள் பத்திரிகைகளில் வந்திருந்தாலும் ஆபத்தொன்றும் இருந்திருக்க முடியாது. எனவே டெயிலி நியூஸ் சொந்தத் தணிக்கை செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

டெயிலி நியூஸின் இந்தப் புளுகைப்பற்றி எமக்குக் கவலையில்லை. ஆனால் இனக் கலவரங்களின் போது, நாட்டின் நலனைக் கருதி சொந்தத் தணிக்கை செய்வதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்த பொழுது, டெயிலி நியூஸ் ஏன் சொந்தத் தணிக்கை செய்யவில்லை என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறோம்.

தமிழ் பத்திரிகையில் ஒரு மாதிரியும், சிங்களப் பத்திரிகையில் இன்னெருமாதிரியும், ஆங்கிலப் பத்திரிகையில் வேருெருமாதிரியும் செய்திகளைத் திரித்துக்கூறும் முதலாளித்துவப் பத்திரிகைகளிடமிருந்து இவற்றை நாம் எதிர் பார்க்க முடியாது, ஏனெனில் வகுப்புவாதம் வளர்க்கப்படுவதனுல் முதலாளித்துவ சுரண்டல் தொடருமல்லவா?

★

## வட பகுதி திரிபுவாதிகள் தலை மறைவு

வட பகுதியிலுள்ள சில திரிபுவாதிகள் கடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் தொங்கிக் கொண்டிருக்கும் முக்கூட்டணி பதவிக்கு வந்ததும் தங்களது சாயம் வெளுத்த சிகப்புச் சேட்டுக்களைப் போட்டு கூட்டங்கள், வரவேற்புகள் தடல்புடலாக நடத்தினர். இந்த அரசாங்கத்தை 'மக்கள் அரசாங்கம்' என்றும், சோஷலிஸம் வந்து விட்டதாகவும் வாய் கிழியக் கத்தித் திரிந்தனர். மக்களும் ஏதோ ஒரு பெரிய மாற்றம் வந்து விட்டது தான் என நம்பினர். விஷேசமாக வேலையற்ற வாலிபர்கள் இவர்களது வெத்துப் பேச்சுகளை நம்பினர். இவர்களது காரியாலயங்களிலும், வீடுகளிலும் நீண்ட தபாலுரைகளுடன் தூங்கி வளிந்தனர். தமது வாலிபர் சங்கங்கள், கட்சி ஆகியவற்றில் சேரும் சகல அங்கத்தவர்களுக்கும் வேலை பெற்றுக் கொடுக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டதால், வாலிபர்கள் பலர் வேலை பெறுவதற்கு முன் இவர்களது வாலிபர் சங்கம், கட்சி ஆகியவற்றில் பணம் கொடுத்து அங்கத்துவக் கார்ட்டுகளைப் பெற்றனர். கார்ட் எடுத்தால் கொள்கையை ஆதரிக்க வேண்டும் என்ற சட்டம் இல்லையே; அவர்களுக்கென்ன வேலை தானே வேண்டும்; தாராளமாகச் சேர்ந்தனர்.

ஆனுல், ஆறு மாதமாகியும் வேலைபெறச் சென்றவர்களுக்கு வேலை கிடைத்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது, கூட்டங்கள், வரவேற்புகள், சொற்பொழிவுகளையும் காணவில்லை. கூட்டங்களில் பிரதான பாத்திரத்தை வகித்து சோஷலிஸத்திற்குப் புது விளக்கம் தரும் பொன்னம்பலத்தின் நடமாட்டத்தையும் காணவில்லை. வேலைக்காக இவர்களிடம் அங்கத்துவம் பெற்ற வாலிபர்கள் இவர்களைத் தேடித்திரிகிறார்கள். இவர்கள் அவர்களது கண்களில் அகப்படாமல் தலைமறைவாகியுள்ளனர். அதுவும் பொன்னம்பலத்தை பட்டதாரி வாலிபர்கள் கூடுதலாகத் தேடி வருவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. ஏனெனில், பல படித்த, வேலையற்ற பட்டதாரி மாணவர்களும், வாலிபர்களும் இவருக்கு பலவித உதவிகளை செய்ததாக அறிய வருகின்றது. சிலர் பண உதவிகளும் சிலர் வேறு உதவிகளும் செய்ததாக அம் மாணவர்களே பகிரங்கமாகக் கூறும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. பரிதாபம் திரிபுவாதிகளின் நிலை. ''நாய் வேஷம் போட்டால் குரைத்துத்தானே'' ஆக வேண்டும்.

# சமசமாஜிகள் தொழிலாளர்களை அவமானப்படுத்துகிறார்கள்

இ. போ. ச. வின் குட்டிச் சர்வாதிகாரி சமசமாஜ அனில் முனசிங்கா, இ. போ. ச. வின் நஷ்டத்துக்கு புதுமையான காரணத்தைக் கண்டுபிடித்துள்ளார். தொழிலாளர்கள்மேல் மறைமுகமாக வீண் பழியை சுமத்துகிறார். இ. போ. ச. வில் டிக்கட் மோசடிகள் நடைபெறுகிறதாம். அதனைத் தடுப்பதற்கு புதிய டிக்கட் மிசின்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் போகிறாராம் என அண்மையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்பு 1956ல் சமசமாஜவாதி பிலிப் குணவர்த்தனா உணவு மந்திரியாக இருந்தபோது கூப்பன் அரிசியை அளப்பதிலுள்ள மோசடியை நீக்குவதற்காக, அளந்துகொடுக்கும் அரிசியை தராசில் நிறுத்துக் கொடுக்க வேண்டும் எனப் பணித்தார். இதனால் கூப்பன் அரிசியை அளப்பதிலுள்ள மோசடியை பிலிப் குணவர்த்தனாவினால் அகற்ற முடிந்ததா? அளப்பதில் இருந்த மோசடி நிறுப்பதில் மாறியது. இந்த நிறுவைத் தராசுகளை வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதி செய்த ஏஜண்ட் பிலிப் குணவர்த்தனாவின் ஒரு உறவினர் என்று அன்று பேசப்பட்டது. அரிசி வாங்கிய பொதுமக்கள் அளவு குறைவதையே கண்டார்கள். இன்றும் அப்படியே உள்ளதை தினசரி கூப்பன் அரிசி வாங்கும் மக்கள் வேதனையுடன் கூறுவதைக் காணலாம்.

அனில் முனசிங்கா இ. போ. ச. வின் தலைவர் மட்டுமல்ல பிரபலப்படுத்திக்கொள்ளும் தொழிற் சங்கத் தலைவருங்கூட. இ. போ. ச. வில் சமசமாஜிகளின் சங்கம்தான் பெரியது எனக் கூறி மற்றைய தொழிற் சங்கங்களிலுள்ள தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி அரசியல் பழிவாங்குவதில் புதிய சாதனைகளைச் செய்து வருபவர். தொழிற் சங்கத் தலைவராகவும், இ. போ. ச. வின் தலைவராகவும் ஏககாலத்தில் இருந்து வரும் இவர், டிக்கட் மோசடியை தொழிலாளர்கள் செய்கிறார்கள் அதனால்தான் இ. போ. ச. நஷ்டமடைகிறது எனக் கூறுவது தொழிலாளர்களையே அவமானப்படுத்துவதாகும். பெரும்பான்மையான இ. போ. ச. தொழிலாளர்கள் அனில் முனசிங்காவின் சங்கத்தில் இருக்கிறார்கள் என்றால், இந்த டிக்கட் மோசடியில் சமசமாஜ தொழிற் சங்கத்திலுள்ள தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளார்களென்பது தானே இதன் அர்த்தம்? தன்னுடைய தலைமையிலுள்ள சங்கத்திலிருக்கும் தொழிலாளர்களும் மோசடிக்காரர்கள் என்று கூறாமல் கூறுகிறாரா?

பொதுத் தேர்தல் முடிந்ததும் அனில் முனசிங்காவை இ. போ. ச. தலைவராக நியமனம் செய்க! என்ற போஸ்டர்களை சகல பஸ்களிலும் ஒட்டி அட்டகாசம் செய்தார்கள். மற்றத் தொழிற் சங்கங்களிலுள்ள தொழிலாளர்களைத் தாக்கினார்கள். அனில் முனசிங்கா இ. போ. ச. தலைவராக வந்ததால் எல்லாம் சரியாகிவிடும், தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்கும், பஸ் போக்குவரத்து சீரடையும் என சமசாஜிகள் மக்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார்கள். அனில் முனசிங்கா இ. போ. ச. தலைவரானார், இ. போ. ச. வில் நடந்துள்ள மாற்றம் என்ன? தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைத்ததா? பஸ் சேவை சீரடைந்ததா? ஆனால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை, மாற்று சங்கங்களிலிருந்தவர்களை ஈவிரக்கமின்றி அரசியல் பழிவாங்கி நடுத்தெருவில் விரட்டியதுதான் அவரின் உயர்ந்த சாதனையாக அமைந்தது. தனக்கு மாதம் 3000 ரூபாய்களை சம்பளமாகப் பெற்றுக்கொள்ளும் இந்த சமசமாஜ சோஷலிஸத்தையும், இ. போ. ச. உயர்ந்த அதிகாரிகளுக்கு முன்பு கொடுத்த சம்பளத்தோடு வேலைப் பாதுகாப்பும் கொடுத்ததுதான் அவரின் மற்றொரு சாதனையாக அமைந்தது. மக்களிடம் கூறப்பட்ட மாற்றம் ஏதும் நடைபெறவில்லை. அதனால், இ. போ. ச. வில் முடை நாற்றம் எடுப்பதைக் காணும் பொதுமக்கள் தமது கடுமையான கண்டனத்தையும் விமர்சனத்தையும் செய்கிறார்கள். மக்களின் கோபாக்கினியிலிருந்து தப்ப, சாதாரண தொழிலாளர்கள் மீது பழியைப் போடுகிறார் அனில் முனசிங்கா, புதிய டிக்கட் மிசின்கள் வந்தவுடன் எல்லாம் சரியாகிவிடும் என்ற போலித்தனமான பிரச்சாரத்தில் ஈடுபடும் அனில் முனசிங்கா பொதுமக்களையும், இ.போ.ச. தொழிலாளர்களையும் மோதவிட்டு தனது ஊழல் நிர்வாகத்தை காப்பாற்றப் பார்க்கிறார். தொழிற் சங்கத் தலைவருக்கு தொழிலாளர் மேல் நம்பிக்கையில்லை. டிக்கட் மிசின் மேல்தான் நம்பிக்கை இருக்கிறது. இது தான் ட்ரொட்ஸ்கிஸம்.

ட்ரொட்ஸ்கிஸ வாதிகளான என். எம். பெரேரா, லெஸ்லி குணவர்த்தனா, கொல்வின் போன்றவர்கள் அமைச்சர்களாக இருக்கும் இதே அரசாங்கத்தின் கீழுள்ள இ. போ. ச. வுக்கு ட்ரொட்ஸ்கியவாதி அனில் முனசிங்கா தலைவர். இவ்வாறிருந்தும் இ. போ. ச. நிர்வாகம் நத்தை வேகத்தில் தான் நகர்கிறது. இ.போ.ச. நிர்வாகம், முன்பும்; யு. என். பி. ஆட்சிக்காலத்திலும்; தற்போதும் தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குவதில், கொடுமைப்படுத்துவதில் கடுகளவும் தளரவில்லை. இந்த நிலையில் இந்த ஏழு மாதத்துக்குள் இ. போ. ச. வில் அனில் முனசிங்கா வெட்டி வீழ்த்தியது என்ன? யு. என். பி. காரர்கள் செய்த நிர்வாக ஊழல்கள் தானே இப்போதும் இ. போ. ச.வில் அதிகாரம் செய்கின்றன?

இந்த நிலையில் இ. போ. ச. தொழிலாளர்களை யு.என்.பிக் காரர்களைப்போல சமசமாஜ அனில் முனசிங்கா அவமானப்படுத்துவது அவரது வர்க்க குணாம்சத்தை எடுத்துக்காட்டுகிறது. அவரது போலி சோஷலிஸ நடிப்பையும் புட்டுக்காட்டுகிறது.

அமைச்சர் பதவிகளுக்காக 21 கோரிக்கைகளைக் காட்டிக் கொடுத்து, தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை சின்னாபின்னப்படுத்திய சமசமாஜிகள் இந்தநாட்டு இடதுசாரி இயக்கத்திலுள்ள புற்றுநோய்க் கிருமிகள். இந்த சமசமாஜிகள் தமது தனிச் சொத்துடமை வர்க்க நலனுக்காக, தொழிலாளி வர்க்கத்தை காட்டிக் கொடுத்துவந்தனர், இப்போது பகிரங்கமாகவே தொழிலாளர்களை அவமானப்படுத்துகின்றனர். தொழிலாளர் வர்க்க விரோதிகளை வளர்ந்துவரும் புரட்சிகர தொழிலாளி வர்க்கம் என்றுமே மன்னிக்காது. தொழிலாளி வர்க்கத் துரோகியான ஏ. ஈ. குணசிங்காவிற்கு கிடைத்த இகழ்ச்சிக்குரிய முடிவுதான் இவர்களுக்கும் காத்திருக்கின்றது. அந்த முடிவும் வெகுதூரத்திலில்லை என்பதையும் கூறிவைக்க விரும்புகிறோம்.

- சம்மட்டி

### ஆசிரியருக்குக் கடிதம்

## தொண்டமான், அசீஸை நம்பி ஏமாறாதீர்கள்

தொண்டமான், அசீஸ் ஆகியோரின் போலி நாடகத்தை கண்ணாரக் கண்டும், காணாதவர்களாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்களே! அவர்களை நம்பி பள்ளத்தில் வீழப் போகிறீர்களா? அன்று பஞ்சப்படி ரூ. 17.50க்காக போராடுவேன் என்றார் அசீஸ், இந்தப் போராட்டமெல்லாம் சரிவராது போராட்டமில்லாமலேயே நாளொன்றுக்கு ரூ. 1-00 வாங்கித் தருவேன் என முழங்கிய தொண்டமான் வாங்கிக் கொடுத்தது என்ன? பிச்சைக் காசு பத்து சதம். யு. என். பியின் பாதந்தாங்கியாக இருந்த தொண்டமான் யு. என். பி. அரசாங்கம், ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கும், பொருட்களின் விலையை உயர்த்துவதற்கும் துணைபுரிந்தார். இது சகலரும் அறிந்த உண்மை.

அசீஸை எடுத்துக் கொண்டால் அவர் ரூ. 17-00 பெற்றுத் தருவார் என நம்பினோம். அவர், ஆட்சிமாறியதும் பாராளுமன்றத்தில் ஒரு சீட்டைப் பிடித்துக் கொண்டு பேச்சுக்காக 17.50 என்று கூறிக்கொண்டு தனது வர்த்தகத்தில் கவனமாயிருக்கிறார். நாம் நம்பி ஏமாந்தோம். அவர் எம்மை ஏமாற்றியதற்கு பரிசாக எம். பி. ஆசனம் கிடைத்தது.

எனவே, தொழிலாளத் தோழர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். தோட்ட முதலாளி தொண்டமானும், வர்த்தகர் அசீஸும் தொழிலாளர்களின் நண்பர்களாக நடிப்பது ஓநாய், வெள்ளாட்டுக்காக கண்ணீர் விட்ட கதை மாதிரியே. இந்த தந்திரிகளின் ஏமாற்றை நம்பி வெளுத்ததெல்லாம் பால் என எண்ணி இனிமேலும் தொழிலாளர்கள் பலியாகக் கூடாது.

தொழிலாளர் வர்க்கம் சுரண்டலிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானால் சரியான தலைமை தரும் புரட்சிகர ஸ்தாபனத்தில் திரள வேண்டும். அத்தகைய ஸ்தாபனம் இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கம் என்பதை நாம் அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ளோம். எனவே, எம்மைப் போன்று நீங்களும் செங்கொடி சங்கத்தின் போரணியில் திரளுங்கள். செங்கொடி ஏந்தி தலைவர் மாஓவின் புரட்சி வழியில் செல்ல முன்வாருங்கள். அப்போது, உண்மையிலேயே சகல தோட்டத் தொழிலாளருக்கும், சகல உழைக்கும் மக்களுக்கும் பூரண விடுதலை கிடைப்பது திண்ணம்

தோட்டத் தொழிலாளர்கள்
தென்னக் கும்பர. நடுகணக்கு
நமுனுகல.

### கூலி விவசாயிகளுக்கு பாதுகாப்பு வேண்டும்

## நெற்காணி சட்டம்: திருத்த வேண்டும்

சம்மாந்துறை கூலி விவசாயத் தொழிலாளர் சங்கம், அண்மையில் கூடிய தனது பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ள கீழ்க்காணும் பிரேரணைகளை காணி, விவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

1. கூலி விவசாயிகளின் உரிமைகள் நெற்காணி சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்படவில்லை. எங்கள் பகுதியிலுள்ள நெற்காணிகளின் உரிமையாளர்கள் கூலி விவசாயிகளை எவ்வித காரணமுமின்றி சொந்த நலன் கருதி திடீர் வேலை நீக்கம் செய்கிறார்கள். இப்படி அநியாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட கூலி விவசாயிகள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்த பெரும் கஷ்டப்படுகிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்ட கூலி விவசாயிகளைப் பாதுகாக்கக் கூடிய சட்டம் எதுவும் நெற்காணி சட்டத்திலும் இல்லை. எனவே, தாங்கள் நெற்காணி சட்டத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். அதாவது;

ஒரு கூலி விவசாயத் தொழிலாளியை நெற் காணி சொந்தக்காரர் வேலைநீக்கம் செய்ய வேண்டுமானால், (A.C.A.S.) நெற்காணி கொமிஷனர் முன்னிலையிலும் ஒரு விசாரணை செய்யப்படவேண்டும். இந்த விசாரணையின்போது, கூலி விவசாயிக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் அந்த விவசாயி தொழில் இலாகா மூலம் நீதி பெறக்கூடியதாக சட்டம் இயற்றப்பட வேண்டும்.

2. 1966ம் ஆண்டு யு.என். பி. கூட்டு அரசாங்கம் நெற்காணி சட்டத்திலுள்ள (செக்ஸன்) சட்டப்பகுதி 29(2) (B) என்ற பகுதியை மாற்றம் செய்ததால், கூலி விவசாயிகள் விவசாயக் குழுக்களில், அதாவது, நெற்காணி பயிர் செய்கைக் குழுக்களில் அங்கம் வகிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. இதனால் கூலி விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாமல் இருக்கிறது. எனவே, காணி, விவசாய அமைச்சராகிய தாங்கள் மேற்கூறிய சட்டப் பகுதியை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## சென்ற வாரத் தொடர்

# பிரெடெரிக் ஏங்கெல்ஸ்

### வி. இ. லெனின்

ஏங்கெல்ஸ் மாஞ்செஸ்டரில் 1842ம் ஆண்டில் குடியேறி, தமது, தகப்பனார் பங்குதாரராகச் சேர்ந்திருந்த வர்த்தக நிலையத்தில் வேலையில் அமர்ந்தார். அங்கே சும்மா பெக்டரி அலுவலகத்தில் ஏங்கெல்ஸ் குந்தியிருக்கவில்லை. தொழிலாளர்கள் அடைத்துக் கிடந்த ஆபாசமான குடியிருப்புகளில் சுற்றி அலைந்தார். அவர்களின் வறுமையையும், துன்பதுயரங்களையும் கண்கூடாகக் கண்டார். ஆனால், சுயமாகக் கண்டறிவதோடு அவர் நின்றுவிடவில்லை. பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை பற்றித் தமக்கு முன்பே வெளியாகியிருந்த விஷயங்களை எல்லாம் அவர் படித்தார்; கைக்கு அகப்பட்ட அதிகாரபூர்வமான எல்லாத் தஸ்தாவேஜுகளையும் அவர் கவனமாகப் பரிசீலித்துப் படித்தார். இப்படி பார்த்தவற்றின் பலனாக விளைந்ததுதான் 1845ம் ஆண்டில் வெளியான ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்னும் நூலின் ஆசிரியர் என்ற முறையில் ஏங்கெல்ஸ் ஆற்றிய முக்கியமான பணியைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஏங்கெல்ஸுக்கு முன்பே மிகப் பலர் பாட்டாளி வர்க்கத்தின் துன்ப துயரங்களை வர்ணித்து, அதற்கு உதவி புரிய வேண்டியதின் அவசியத்தை எடுத்துச் சொல்லியுள்ளனர். பாட்டாளி வர்க்கம் துன்ப துயரங்களை அனுபவிக்கும் வர்க்கம் மட்டுமல்ல உண்மையிலே பாட்டாளி வர்க்கத்தின் வெட்கக் கேடான பொருளாதாரநிலைமை தடுக்க முடியாத வகையில் அதை முன் தள்ளிச் செல்லுகிறது. தனது இறுதி விடுதலைக்காகப் போராடும்படி நிர்ப்பந்திக்கிறது. என்று ஏங்கெல்ஸ்தான் முதன் முதலாகச் சொன்னவர். மேலும், போராடும் பாட்டாளி வர்க்கம் தன் கையையே தனக்குதவியாகக் கொள்ளும். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கம் தங்களது விமோசனம் சோஷலிஸத்தில் மட்டுமே உள்ளது என்று தொழிலாளர்கள் அறியும் நிலைக்குத் தவிர்க்க முடியாதபடி கொண்டுபோய்விடும். மறுபக்கத்தில், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் லட்சியமாகும். இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை பற்றிய ஏங்கெல்ஸ் நூலிலுள்ள பிரதான கருத்துக்கள் இவைதான். சிந்தனையுள்ள போராடிக் கொண்டிருக்கிற பாட்டாளிகள் எல்லோரும் இந்தக் கருத்துக்களை



இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் அவை முழுக்க முழுக்கப் புதியவையாயிருந்தன. சிந்தனையைக் கவரும் நடையில் எழுதப்பட்ட இந் நூலில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் துன்ப துயரங்களைப் பற்றிய முற்றிலும் உண்மையான, அதிர்ச்சியுண்டாக்கத்தக்க சித்திரங்கள் இந் நூலிலே நிறைந்துள்ளன. இந்த நூல் முதலாளித்துவத்தின் மீதும், பூர்ஷுவா வர்க்கத்தின் மீதும் மிகப் பயங்கரமான குற்றஞ்சாட்டாக விளங்கியது. மக்களின் மனதில் அது பசுமரத்தாணிபோல் பதிந்தது. ஏங்கெல்ஸின் நூல் நவீன காலப் பாட்டாளி வர்க்கத்தின் நிலைமையைப் பற்றிய மிகச் சிறந்த சித்திரத்தை வழங்குகிறது என்று இதிலிருந்து மேற்கோள் காட்டத் தொடங்கினார்கள். உண்மையிலே பார்த்தால், 1845ம் ஆண்டுக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, தொழிலாளி வர்க்கத்தின் துன்பதுயரங்களைப் பற்றி இவ்வளவு வியக்கத்தக்க உண்மையான சித்திரம் வெளிவந்தது கிடையாது.

இங்கிலாந்துக்கு வந்த பிறகுதான் ஏங்கெல்ஸ் சோஷலிஸ்ட் ஆனார். அதற்கு முன் இல்லை. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமாக வேலை செய்துவந்த நபர்களுடன் மாஞ்செஸ்டரில் ஏங்கெல்ஸ் தொடர்பு கொண்டார்; பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் பத்திரிகைகளில் எழுதத் துவங்கினார். 1844ம் ஆண்டில், ஜெர்மனியிலிருந்து திரும்பிவரும் வழியில், பாரிஸ் மாநகரில் அவர் மார்க்ஸைச் சந்தித்துப் பழகினார். மார்க்ஸுடன் ஏற்கனவே அவர் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தவர்தான். பாரிஸில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின், பிரெஞ்சு வாழ்க்கையின் செல்வாக்கின் கீழ் மார்க்ஸும் சோஷலிஸ்ட் ஆகிவிட்டார். இங்கே இவ்விரு நண்பர்களும் சேர்ந்து ''புனிதக் குடும்பம் அல்லது விமர்சன வகைப்பட்ட விமர்சனத்தைப் பற்றி ஒரு விமர்சனம்'' என்று தலைப்பிட்ட ஒரு நூலை எழுதினார்கள். ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்ற நூல் வெளியாவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பே இது வெளிவந்தது. இதன் பெரும் பகுதியை மார்க்ஸ் தான் எழுதினார். இந் நூலில் புரட்சிகரமான லோகாயதவாத சோஷலிஸத்தின் அடிப்படைகள்—அதன் பிரதான கருத்துக்களை மேலே விளக்கிச் சொல்லியிருக்கிறோம்—அடங்கியுள்ளன. ''புனிதக் குடும்பம்'' என்பது தத்துவ ஞானிகளான பௌவர் சகோதரர்களையும், அவர்களைப் பின்பற்றுபவர்களையும் குறிக்கும் கேலிப் பெயராகும். எல்லாவகையான யதார்த்தத்திற்கும் அப்பாற்பட்ட, கட்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பாற்பட்ட ஒரு விமர்சனத்தை இந்தக் கனவான்கள் பிரச்சாரம் செய்தார்கள். எல்லா விதமான நடைமுறை நடவடிக்கைகளையும் அது நிராகரித்தது; நம்மைச் சூழ்ந்துள்ள உலகையும், அதில் நடந்து வரும் நிகழ்ச்சிகளையும் பற்றி அந்த விமர்சனம் வெறுமனே ''விமர்சனரீதியாக''ச் சிந்தனை செய்வதோடு நின்று கொண்டிருந்தது. இந்தக் கனவான்கள்—பௌவர் சகோதர்கள்—பாட்டாளி வர்க்கம் விமர்சனப் பார்வையற்ற கும்பல் என்று அதை இழிவு படுத்தினார்கள். அந்த அபத்தமான, தீங்கு விளைவிக்கக்கூடிய இந்தப் போக்கை மார்க்ஸும் ஏங்கெல்ஸும் தீவிரமாக எதிர்த்தார்கள். ஆளும் வர்க்கங்களாலும். அரசாலும் மிதித்து நசுக்கப்பட்டுவரும் தொழிலாளி என்ற அசல் மனிதப் பிரகிருதியின் சார்பாக வீண் சிந்தனை அல்ல, மேம்பட்ட சமுதாய அமைப்பு முறைக்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்று மார்க்ஸும், ஏங்கெல்ஸும் கோரினார்கள். இந்தப் போராட்டத்தை நடத்துவதில் அக்கறை கொண்டுள்ள சக்தியாக, இந்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் திறன் பெற்றுள்ள சக்தியாக பாட்டாளி வர்க்கத்தை அவர்கள் கருதினார்கள் என்பது நிச்சயம். ''புனிதக் குடும்பம்'' வெளிவருவதற்கு முன்பே மார்க்ஸும், ருகேயும் நடத்திய ''ஜெர்மன்-பிரெஞ்சு வருஷானுபந்தம்'' என்ற ''சஞ்சிகையில்'' அரசியல் பொருளாதாரம் சம்பந்தமான விமர்சனக் கட்டுரைகள்'' என்ற தொடரை ஏங்கெல்ஸ் வெளியிட்டார். அக் கட்டுரைகளில் தனி சொத்தின் ஆதிக்கத்தால் ஏற்பட்டுத் தீரும் விளைவுகள் என்ற முறையில், நவீனகாலப் பொருளாதார அமைப்பு முறையின் பிரதான தோற்றங்களை சோஷலிஸ நோக்கு நிலையிலிருந்து பரிசீலித்தார். அரசியல் பொருளாதாரத்தைப் பயில்வதென்று மார்க்ஸ் முடிவு செய்ததற்கு அவர் ஏங்கெல்ஸுடன் தொடர்பு கொண்டிருந்தது ஒரு காரணம் என்பதில் சந்தேகமேயில்லை. அரசியல் பொருளாதாரம் என்ற விஞ்ஞானத் துறையில் மார்க்ஸ் அசல் புரட்சியையேஉண்டாக்கிவிட்டார்.

1845லிருந்து 1847வரை ஏங்கெல்ஸ் பிரஸ்ஸெல்ஸிலும், பாரிஸிலும் வாழ்ந்தார். விஞ்ஞானப் பயிற்சியோடு கூடவே பிரஸ்ஸெல்ஸ், பாரிஸ் நகரங்களிலுள்ள ஜெர்மன் தொழிலாளர்களிடையே நடைமுறை நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டிருந்தார். இங்கே இரகசியமாயிருந்த ஜெர்மன் ''கம்யூனிஸ்ட் லீக்'' என்ற சங்கத்துடன் மார்க்ஸும், ஏங்கெல்ஸும் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டனர். அவர்கள் வரையறுத்து விவரித்துள்ள சோஷலிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கும்படி அந்தச் சங்கம் அவர்களைப் பணித்தது. இவ்வழியேதான் மார்க்ஸும், ஏங்கெல்ஸும் எழுதிய ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'' என்ற புகழ்பெற்ற நூல் 1848ல் வெளிவந்தது. இந்தச் சிறு பிரசுரம் மிகப்பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது. அதன் உணர்ச்சி நாகரிக உலகில் ஸ்தாபனரீதியாக அணிதிரண்டு போராடி வரும் பாட்டாளி வர்க்கம் முழுவதையும் இன்றைக்கும்கூட ஊக்குவித்து இயக்கிச் செல்கிறது.

முதன்முதலாக பிரான்ஸில் தோன்றி, பின்னர் மற்ற மேலைய ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிய 1848ம் ஆண்டுப் புரட்சி மார்க்ஸையும், ஏங்கெல்ஸையும் தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிவரச் செய்தது. இங்கே பிரஷ்யாவில், கொலோன் நகரிலிருந்து வெளிவந்து ஜனநாயகத் தன்மையுள்ள ''ரைன் பிரதேசப் பத்திரிகை'' என்ற பத்திரிகையை அவர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்து நடத்தினார்கள். ரெனிஷ் பிரஷ்யாவில் எல்லாப் புரட்சிகர ஜனநாயக அபிலாஷைகளின் இதயமாக, ஆன்மாவாக இவ்விரு நண்பர்களும் விளங்கினார். மக்களின், சுதந்திரத்தின் நலன்களைப் பாதுகாத்து அவர்கள் பிற்போக்குச் சக்திகளைக் கடைசிவரை எதிர்த்துப் போராடினர். பிற்போக்குச் சக்திகளின் கை மேலோங்கியது என்பது நாமறிந்த சங்கதிதான். ''ரைன் பிரதேசப் பத்திரிகை'' தடை செய்யப்பட்டது. நாடுகடத்தப்பட்ட காலத்தில் தமது பிரஷ்யக் குடியுரிமையை இழந்துவிட்டிருந்த மார்க்ஸ் பிரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆயுதந்தாங்கிய மக்கள் எழுச்சியில் ஏங்கெல்ஸ் பங்கு கொண்டார், சுதந்திரத்துக்காக மூன்று முனைகளில் சமர் புரிந்தார். எழுச்சியாளர்கள் தோல்வியுற்ற பிறகு சுவிட்ஸர்லாந்து வழியே லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

மார்க்ஸும் அங்கேயே குடியமைத்துக்கொண்டார் ஏங்கெல்ஸ் மீண்டும் ஒரு குமாஸ்தா ஆகிவிட்டார். கொஞ்ச காலம் கழித்து, தாம் 1840—1850 ஆண்டுகளில் வேலை பார்த்த அதே மாஞ்செஸ்டரிலேயே பங்குதாரராக ஆனார். 1870வரை அவர் மாஞ்செஸ்டரிலேயே வாழ்ந்து வர, மார்க்ஸ் லண்டனில் வாழ்ந்தார். இருந்தபோதிலும் அவ்விருவரும் பரஸ்பரம் உற்சாகம் பொங்கும் அறிவுத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதை அது தடுக்கவில்லை. அநேகமாக தினந்தோறும் ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கடிதப் போக்குவரத்து மூலம் இவ்விரு நண்பர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையும் ஞானத்தையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள். விஞ்ஞானபூர்வமான சோஷலிஸத்தை வகுத்துக் கொடுப்பதில் இணைந்து பணிபுரிவதைத் தொடர்ந்தார்கள். 1870ம் ஆண்டில் ஏங்கெல்ஸ் லண்டனுக்கு வந்து அங்கேயே தங்கிவிட்டார். கடும் உழைப்பு நிறைந்த அவர்களுடைய பொதுவான அறிவுத்துறை வாழ்க்கை மார்க்ஸ் மறைந்த 1883ம் ஆண்டுவரை நீடித்தது. மார்க்ஸ் பங்குக்கு இந்த பொது அறிவுத்துறை வாழ்க்கையின் பலன் ''மூலதனம்'' என்ற நூலாகும். நமது யுகத்திலேயே அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய யாவற்றிலும் சிறந்த நூல் இதுதான். ஏங்கெல்ஸைப் பொறுத்த மட்டில் அதன் பலன் பல பெரிய, சிறிய நூல்கள் எழுதியதுதான். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சிக்கல் நிறைந்த தோற்றங்களைப் பற்றிய பகுப்பாராய்ச்சியிலே மார்க்ஸ் ஈடுபட்டார். ஏங்கெல்ஸ் எளிய நடையில் எழுதிய, அடிக்கடி எதிர்வாதங்களைச் சந்திக்கிழுத்துத் தாக்கும் நூல்களில் வரலாறு பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டத்தையும், மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவத்தையும் அனுசரித்த ரீதியிலே, மிகப் பொதுவான விஞ்ஞா

5-ம் பக்கம் பார்க்க

மனித குலத்தின் மாபெரும் சிந்தனையாளரும், உலக பாட்டாளி வர்க்கத்தின் மேன்மைமிகு தலைவரும், தத்துவ ஆசிரியரும், விஞ்ஞான சோஷலிஸத்தின் கர்த்தாக்களில் ஒருவரும், மாமேதை கார்ல் மார்க்ஸின் இன்னுயிர் தோழருமான மாமேதை பிரெடெரிக் ஏங்கெல்ஸ் அவர்களின் 150வது பிறந்த தின (1820-1970) ஞாபகார்த்தமாக, மாமேதை லெனின் அவர்கள் பிரெடெரிக் ஏங்கெல்ஸ் 1895ம் ஆண்டு காலமானபோது எழுதிய கட்டுரையை இங்கு பெருமையுடன் பிரசுரிக்கின்றோம்.

இக் கட்டுரை 1895ல் எழுதப்பட்டு, 1896, ''ரபோத்னிக்'' (''உழைப்பாளி'') என்ற ரஷ்ய பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

''ஒடுக்குவோரும், ஒடுக்கப்படுவோரும் உள்ள, தரித்திரம் நிரம்பிய இந்த மரணவேதனையுள்ள உலகில் புதிய புரட்சி சகாப்தம் புலரும் ஒவ்வொரு சமயமும் இம் மேதைகள் நம்முடன் இன்னும் வாழ்ந்து வருவதைப் போன்று அவர்களது மணிக்குரல் தெளிவாக முழங்குவதைக் கேட்கிறோம்.''

— ஆர்.

# அரபு மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளின் புதிய சதி

## உலக வலம்

உஸ்மான்

சோவியத் திரிபுவாதக் கும்பல் என்னதான் கூறிய போதும், ஏகாதிபத்தியத்தின் இயல்பு எள்ளளவும் மாறவுமில்லை, மாறப்போவதுமில்லை என்பதை அடிக்கடி நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். உலகின் பல்வேறு பகுதிகளிலே நடைபெறும் நிகழ்ச்சிகளை நோக்கினாலே இந்த உண்மை தெளிவாகிவிடும்.

சில காலத்துக்கு முன் ஜோர்தானிலே மன்னன் ஹுசேனைத் தலைமையாகக் கொண்ட படு பிற்போக்குச் சக்திகளைக் கருவியாகக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் பாலஸ்தீன் விடுதலை இயக்கத்தை நசுக்க எடுத்த எதிர்ப்புரட்சி முயற்சிகள் நாம் நன்கறிந்ததே. அதில் பூரண வெற்றி கிடைக்காமற் போகவே, இப்போது வேறு வகைகளில் சூழ்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறது ஏகாதிபத்தியம்.

இன்றைய காலகட்டத்திலே பாலஸ்தீனிய விடுதலை இயக்கமானது வெறும் தேசிய இயக்கமாக மாத்திரமல்லாது, ஓரளவு வர்க்க உணர்வு உடையதாயும், ஏகாதிபத்திய எதிர்ப்பை முழுமூச்சாகக் கொண்டதாயும் இருக்கிறது. எனவே அதனை எப்பாடுபட்டேனும் மழுங்கடித்துத் திசை திருப்ப முயல்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் சமீபத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியமும், இஸ்ரேலிய சியோனிஸமும் புதியதொரு சூழ்ச்சித் திட்டத்தை வெளிப்படுத்தின. அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் முழு ஆதரவுடன் வெளியிடப்பட்ட இத் திட்டம் ஜோர்தான் நதிக்கரையிலே ''பாலஸ்தீன் அரசு'' ஒன்றை ஏற்படுத்தும் யோசனையைத் தெரிவித்தது,

இஸ்ரேலிய ஏகாதிபத்திய தாஸர்களும், அமெரிக்க ஏகாதிபத்திய சூத்திரதாரிகளும் இத் திட்டத்தைப் பிரஸ்தாபித்ததுமே இவர்களின் கைப்பொம்மைகளாயுள்ள சில அரசியல் அனுமதேயங்கள் ஆர்ப்பரித்து ''தற்காலிக பாலஸ்தீன சுதந்திர அரசாங்கத்தை'' நிறுவப்போவதாகக் கூறின. ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களிலே ஏகாதிபத்திய ஏஜண்டுகளாக எச்சிலுண்டு வாழும் இப்பொம்மைகளைப் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரோ, முற்போக்கு அரபு மக்களோ பொருட்படுத்தவில்லை.

ஆனால், மேனாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகளிலே தடல்புடலான பிரசார இயக்கம் நடத்தப்பட்டது. இதில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், சோவியத் திரிபுவாதப் பத்திரிகை எழுத்தாளர்கள் ''சிந்திக்க வேண்டிய விஷயம்'' என்று சிலாகித்து எழுதியமையாகும்.

ஆனால், உலகின் முற்போக்குச் சக்திகள் உடனே இத் திட்டத்தைத் தோலுரித்து அம்பலப்படுத்தின. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அல்பத்தாஹ் தலைவர் யாஸீர் அரபாத் ''ஆயுதமேந்திய போராட்டத்தைத் தவிர்ந்த மற்றெந்தப் பாதையும் நிராகரிக்கப்பட வேண்டியது'' என்றார்.

இதற்கிடையில், மன்னன் ஹுசேனும், இஸ்ரேலிய அரசியல்வாதிகள் 'சிலரும் இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடாத்தியிருப்பதாக மேற்குநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் கூறியுள்ளன. இவற்றையெல்லாம் உள்ளடக்கும் வகையில் இப் புதிய ஏகாதிபத்தியத் திட்டம் ''படுமோசமான அரசியல் பொறிக்கிடங்கு'' என்று மக்கள் சீனத்தின் ''மக்கள் தினசரி'' விவரித்துள்ளது.

★

## கினி குடியரசு காலனித்துவவாதிகளின் ஆக்கிரமிப்பை முறியடிக்கும்

ஏகாதிபத்தியவாதிகள் இரவும் பகலும் இடைவிடாது எதிர்ப்புரட்சி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பதையே சில நாட்களுக்கு முன் கினி நாட்டில் நிகழ்ந்த ஆக்கிரமிப்பு நிரூபிக்கின்றது. ஆபிரிக்காவில் ''பிறர் தலையீடு கூடாது'' என்று சோவியத் திரிபுவாதிகள் வாய் வேதாந்தம் பேசிய போது எதிர்ப்புரட்சிக்கு அவர்களும் உடந்தையாகவே இருந்து வந்திருக்கின்றனர். பியாப்ரா சம்பவங்கள் இதற்கு அசைக்க முடியாத சான்றாகும்.

கினி நாட்டிலேதான் கானாவின் முன்னைநாள் தேசியவாதி என்குறுமா சீவிக்கிறார். கினி குடியரசு இன்று ஆபிரிக்காவில் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு முனைப்பான மையமாக விளங்குகிறது. சீன மக்கள் குடியரசுடன் நட்புறவு பூண்டிருக்கிறது ஆபிரிக்க விடுதலைக் குரலை ஓங்கி ஒலிக்கிறது. ஆகவே அதன் கழுத்தை நெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முன்னிற்பதில் ஆச்சரியம் இல்லை. கினி அரசின் தலைவர் சேகு தோரேயும் அங்குள்ள முற்போக்கு அணியும் அரசியல் போதம் பெற்றவர்களாகையால் மக்களாதரவுடன்—ஒத்துழைப்புடனும் காலனித்துவவாதிகளினதும், ஏகாதிபத்தியவாதிகளினதும் நீசத்தனமான ஆக்கிரமிப்பை எதிர்த்து வெல்லும் என்பதில் சந்தேகமில்லை.

மக்களை நம்பி அவர்களைச் சார்ந்து நிற்பதன் பலம் இது. அந்தளவிற்குக் கினி குடியரசின் தலைவர்கள் தம்மைச் சுற்றியிருக்கும் நாடுகளில் நடைபெற்ற எதிர்ப் புரட்சியிலிருந்து தக்க படிப்பினைகளைப் பெற்றுள்ளனர்.

பழைய காலனியாட்சியிலிருந்த படைகள், பொலிஸ் முதலியவற்றை பெருமளவு மாற்றி அவற்றை அரசியல்மயப்படுத்தியதில் சேகு தோரே தொண்டாற்றி இருக்கிறார். இல்லாவிடின் படைகள் எப்போதோ ஏகாதிபத்திய வாதிகளின் பக்கம் சார்ந்திருக்கும். இந்தப் படிப்பினையை ஆசியாவில் பல நாடுகள் இன்னும் உணரவேயில்லை.

★

## தென் அமெரிக்க கடல் வளங்களை சூறையாடும் அமெரிக்க கொள்ளையருக்கு கடுமையான எதிர்ப்பு வளர்கிறது

தலைவர் மாஓ ஒரு சந்தர்ப்பத்திலே சொன்னார். ''லத்தீன் அமெரிக்க மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குக் கொத்தடிமையானவர்களல்ல.'' தீர்க்க தரிசனம் போன்று அமைந்த இவ்வாக்கியத்திற்கு ஏற்பவே சமீப காலத்தில் அக் கண்டத்திலே சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

லத்தீன் அமெரிக்கக் கண்டத்திலே பொதுவாக அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு பரவலாக இருக்கிறது. ஏகாதிபத்தியம் தனது அடிவருடிகளான இராணுவங்களைக் கொண்டு கொடுங்கோல் ஆட்சிகளை அங்கு நடத்தி வருகிறது. எனினும், நாளுக்கு நாள் வெறுப்பும், எதிர்ப்பும் அதிகரிப்பதை எவரும் காணலாம்.

சமீபத்திலே கடல் எல்லை உரிமைகள் பற்றி,கடுமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு அங்கு எழுந்துள்ளது. தென் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த சமுத்திரத்தில் பல்லாண்டுகளாகவே ஏகாதிபத்தியவாதிகள் தமது கப்பல்களை அனுப்பி கடல் வளங்களைச் சூறையாடி வந்துள்ளனர். ஒரு நாட்டின் கரையிலிருந்து மூன்று மைல் வரையுமே அந்நாட்டின் உரிமை செல்லுபடியாகும் என்று எதேச்சாதிகாரப் போக்கில் அமெரிக்கா கூறிவந்துள்ளது. இவ்வாறு கூறிக்கொண்டு அமெரிக்க ஏகபோகப் பெருமுதலாளித்துவ கம்பனிகள் தமது மீன்பிடிக் கப்பல்களை லத்தீன் அமெரிக்க நாடுகளின் கரையோரமெல்லாம் அனுப்பி, அவற்றின் நியாயமான நீர் வளங்களைச் சூறையாடின.

நீர் வளமும், நிலவளமும் நிறைந்த கண்டம் தென் அமெரிக்கா; கனிச் சுரங்கங்கள் மலிந்த கண்டம் அது. உலகின் வளங்கள் பல அங்குண்டு. அப்படியிருந்தும் தாம் அடிமைகளாய், ஏழைகளாய் வாழ்வதை லத்தீன் அமெரிக்க மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

அண்மையில் பதினொரு லத்தீன் அமெரிக்க நாடுகள் கூடி, தமது ஆதிபத்திய உரிமை, தத்தம் நாட்டுக் கரைகளிலிருந்து 200 மைல்கள் வரை செல்லும் என்று பிரகடனம் செய்துள்ளன. இது ஏகாதிபத்திய எதிர்ப்பின் புதிய ஒருபடியைக் காட்டுன்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்வதைப் போலவே ரஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் சமீப காலத்தில் பிற நாடுகளின் ஆதிபத்திய உரிமைகளை மதியாது தனது கப்பல்களை அனுப்பிச் சுரண்டலை மேற்கொள்கிறது. ''கடல் வளங்கள் அனைவருக்கும் சொந்தம்'' என்ற கோஷத்தை முன்வைத்துவிட்டுப் பின்னர், நடைமுறையில் அமெரிக்காவும், ரஷ்யாவும் கடல் அனைத்திலும் மீன்பிடிக்க முனைகின்றன.

லத்தீன் அமெரிக்காவில் வளர்ந்து வரும் எதிர்ப்பு ஏகாதிபத்தியத்திற்கு மட்டுமன்றி, சமூக ஏகாதிபத்தியத்திற்கும் எச்சரிக்கையாகும்.

# பிரெடெரிக் ஏங்கெல்ஸ்

◎ 4-ம் பக்கத் தொடர்

னப் பிரச்சினைகளையும், பலவகைப்பட்ட சென்றகால, நிகழ்கால நிகழ்ச்சிகளையும் விளக்கினார். ஏங்கெல்ஸின் இந்த நூல்களில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவோம்; டூரிங்குக்கு மறுப்பாக எழுதிய விவாதகரமான நூல் (இந்நூலில் தத்துவஞானம், இயற்கை விஞ்ஞானம், சமுதாய விஞ்ஞானங்கள் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட மாபெரும் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன); ''குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்ற நூல்; ''லுத்விக் பாயர் பாக்'' என்ற நூல்; ருஷ்ய அரசின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய கட்டுரை; குடியிருப்புப் பிரச்சினையைப் பற்றிய சில குறிப்பிடத்தக்க கட்டுரைகள்; கடைசியாக ருஷ்யாவின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி எழுதப்பட்ட இரண்டு சிறிய, ஆனால், மதிப்பு மிகுந்த கட்டுரைகள். மூலதனத்தைப்பற்றிய தமது விரிவான வேலையை முடிக்கு முன்னர் மார்க்ஸ் காலமானார். இருந்தாலும், அசல் குறிப்புகள் வடிவத்தில் அது ஏற்கனவே பூர்ணமாக முடிந்திருந்தது. தமது நண்பர் மறைந்த பிறகு ''மூலதனத்தின்'' இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைத் தயாரித்து வெளியிடும் சிரமமிக்க வேலையை ஏங்கெல்ஸ் மேற்கொண்டார். (அவரது மரணம் நான்காம் தொகுதியைத் தயாரிப்பதைத் தடுத்துவிட்டது.) இவ்விரு தொகுதிகள் விஷயத்தில் ஏங்கெல்ஸ் அபாரமாக உழைக்க வேண்டியிருந்தது. ''மூலதனத்தின்'' இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளை வெளியீட்டதன் மூலம் ஏங்கெல்ஸ் தமது நண்பராகிய மேதைக்கு மாண்புமிக்க நினைவுச் சின்னம் நிறுவினார்; அந்த நினைவுச் சின்னத்தில் தம்மையறியாமலேயே தமது பெயரையும் அழியாத வகையில் பொறித்துவிட்டார் என்று ஆஸ்திரிய சமூக ஜனநாயகவாதியான ஆட்லெர் குறிப்பிட்டது மிகவும் சரி. உண்மையிலே ''மூலதனத்தின்'' இவ்விரு தொகுதிகளும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவருடைய பணியேயாகும். மனத்தை உருக்கும் நட்பைக் குறித்துப் பல உதாரணங்கள் காட்டும் பழங் கதைகள் உண்டு. தனது விஞ்ஞானத்தைச் சிருஷ்டித்தவர்கள் இரண்டு அறிஞர்கள், இரண்டு போராட்ட வீரர்கள்; அவர்களிடையே நிலவிய உறவு முன்னோர்கள் மனிதநட்புபற்றி எழுதியுள்ள நெஞ்சையள்ளும் கதைகளையெல்லாம் மிஞ்சக் கூடியதாயிருந்தது என்று ஐரோப்பிய பாட்டாளி வர்க்கம் சொல்லிக் கொள்ளலாம். ஏங்கெல்ஸ் எப்பொழுதுமே மொத்தத்தில், நியாயமாகத்தான்-மார்க்ஸுக்கு முதன்மை கொடுத்தார். பழைய நண்பர் ஒருவருக்கு எழுதுகையில் ''மார்க்ஸ் வாழ்ந்திருந்த காலத்தில் நான் அவருக்குப் பக்க வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தவன்'' என்று ஏங்கெல்ஸ் குறிப்பிட்டார். மார்க்ஸ் உயிரோடிருக்கும் போது அவர் மீது ஏங்கெல்ஸ் வைத்திருந்த பாசத்துக்கும், மறைந்த மார்க்ஸின் நினைவுபற்றி அவர் வைத்திருந்த புனித மதிப்புக்கும் எல்லையே கிடையாது. இந்தக் கடின சித்தமுள்ள போராட்ட வீரருக்கு, கட்டுப்பாடு மிகுந்த சிந்தனையாளருக்கு, ஆழ்ந்த அன்பு செலுத்தும் இதயம் இருந்தது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

# கினி மக்களுக்கே இறுதி வெற்றி

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் போர்த்துக்கீஸ் காலனித்துவவாதிகளின் கூலிப் படைகள், கினி குடியரசின் மீது தாக்குதல் தொடுத்துள்ளதைக் கண்டித்து மக்கள் சீனக் குடியரசு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் 22ந் திகதி போர்த்துக்கீஸ் காலனித்துவவாதிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன், ஜனாதிபதி சேகு தோரேயின் தலைமையிலுள்ள கினி குடியரசு அரசாங்கத்தை ஒரேயடியுடன் கவிழ்த்து, கினி மக்களை மீண்டும் ஒருமுறை இருண்ட காலனித்துவ ஆட்சிக்குள் அமிழ்த்தும்வீணான நோக்கத்துடன் கொள்ளைத் தந்திரோபாயங்களைக் கையாண்டு கூலிப் படைகளை ஏவி கினி மீது திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர். இது, கினி மக்களுக்கும் மற்றும் ஆபிரிக்க மக்களுக்கும் எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினாலும், போர்த்துக்கீஸ காலனித்துவவாதிகளினாலும் இழைக்கப்பட்ட புதிய கீழ்த்தரமான ஒரு குற்றமாகும். சீன அரசாங்கமும், மக்களும் இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிரான தமது எல்லையற்ற கடுஞ்சினத்தையும், கண்டனத்தையும் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி சேகு தோரேயின் தலைமையின் கீழ் கினி மக்களும், ஆயுதப்படைகளும் தமது பொது எதிரிகளுக்கு எதிரான வெறுப்புணர்வுடனும், தீரத்துடனும் போரிட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பலத்த அடிகளைக் கொடுப்பதன் மூலம் தமது அரசின் சுயாதிபத்தியத்தையும், தேசிய சுதந்திரத்தையும் வெற்றியுடன் பாதுகாக்கின்றனர். சீன அரசாங்கமும், மக்களும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிடும் கினி மக்களின் புரட்சிகர உணர்வை மனதாரப் போற்றுவதுடன், ஆக்கிரமிப்புக்கெதிரான போராட்டத்தில் கினி மக்கள் அடைந்த வெற்றிகளையும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றனர்.

போர்த்துகீஸ் காலனித்துவம், ஆபிரிக்க மக்களை ஈவிரக்கமின்றிச் சூறையாடியதன் மூலம் கொழுத்து வளர்ந்தது. அது, 15ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வரலாற்றில் மிகக் கேவலமான நீக்ரோ வியாபாரத்தின் மூலம் ஆபிரிக்காவில் ஆரம்பமாகியது. பல நூற்றுண்டு காலமாக அது தனது சொந்த நாட்டிலும் பார்க்க 20 பங்கு பெரிய தான ஆபிரிக்க நாடுகளைப் பலாத்காரமாகக் கைப்பற்றி ஆபிரிக்க மக்களை ஈவிரக்கமின்றி அடக்கியொடுக்கிச் சுரண்டியது. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ஆபிரிக்கத் தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதில் அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசுவாசமுள்ள காவல் நாயாக மாறியது. அது கினி (பிஸ்ஸோ), அங்கோலா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் மக்களது தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதற்கு பலாத்காரத்தைப் பாவித்து ரத்தக் களரியை ஏற்படுத்துகின்றது. அது, இனப் பாகுபாடு காட்டும் காட்டுமிராண்டித்தனமான கொள்கையை நிலைநிறுத்துவதில் தென் ஆபிரிக்க, தென் ரொடிசிய வெள்ளை காலனித்துவ ஆட்சியாளர்களுடன் ஒத்துழைக்கின்றது. கினி குடியரசு, தான்ஸானியா ஐக்கியக் குடியரசு, சாம்பியா குடியரசு ஆகியவற்றின் புனித எல்லைகளுக்குள் அடிக்கடி ஆயுதந்தாங்கிய ஊடுருவல்களை நடத்துவதுடன், சுதந்திரமான ஆபிரிக்க நாடுகளின் சுயாதிபத்தியத்துக்கும் பயங்கரமான ஆபத்தாக விளங்குகிறது.

முழுக்க முழுக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவு காரணமாகவே உளுத்துப் போன போர்த்துக்கீஸ் காலனித்துவஆட்சி' கினிக்கு எதிராக இத்தகைய அப்பட்டமான ஆக்கிரமிப்பைத் தொடுத்தது. உள்ளும், புறமும் கஷ்டங்களால் சூழப்பட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆசியருக்கு எதிராகப் போராட ஆசியரையும், ஆபிரிக்க மக்களுக்கு எதிராகப் போராட ஆபிரிக்கரையும் பாவித்தல், சகல நாடுகளிலும் உள்ள துரோகிகளை விலை கொடுத்து வாங்குதல், அதன் நவீன காலனித்துவ கொள்கைகளை நிலைநாட்ட கூலிப்படைகளை அனுப்புதல் ஆகிய தந்திரோபாயங்களை அடிக்கடி பாவிக்கின்றது. இப்போது மகத்தான கினி குடியரசை முற்றுகையிட்டுள்ள ஐரோப்பிய, ஆபிரிக்க கூலிப்படைகளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு விசேஷ படைப்பிரிவேயாகும்.

முழு உலகினதும் மக்களை அடிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நவ-காலனித்துவத்தின் கோட்டையான அமெரிக்காவும், கேடுகெட்ட பழம் காலனித்துவ வாதிகளின் நாடாகிய போர்த்துக்கீஸும் ஒத்துழைப்பது, காலனித்துவம் இப்பொழுதும் பலமுடன் விளங்குகின்றது என்பதைக் காட்டவில்லை; மாறுக, அது காலனித்துவம், ஏகபோக மூலதனம், ஏகாதிபத்தியம் நவ-காலனித்துவம் ஆகிய சகல பீடைகளும் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் வீசப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையே காட்டுகிறது. அமெரிக்க, போர்த்துகீஸ் ஏகாதிபத்தியத்தினுல் தொடுக்கப்பட்டுள்ள மூர்க்கமான இத் தாக்குதல் அவர்களின் தவிர்க்க முடியாத அழிவிலிருந்து அவற்றை எப்படியும் காப்பாற்றப் போவதில்லை.

கினி மக்களது போராட்டத்தின் முக்கியத்துவம், கினியின் எல்லைகளையும் கடந்து வெகு தூரம் செல்கின்றது. கினி மக்கள் தமது தாய் நாட்டின் விடுதலைக்கும், சுயாதிபத்தியத்துக்குமாகப் போராடுவதுடன் மாத்திரமல்லாது மற்றும் ஆபிரிக்க நாடுகளினதும், விடுதலைக்கும், சுயாதிபத்தியத்தையும் வேண்டி நிற்கும் உலகின் சகல நாடுகளுக்காவும் போராடுகின்றனர். அமெரிக்க, போர்த்துக்கீஸ் ஏகாதிபத்யவாதிகளின் திட்டம் எந்தவகையிலும் வெற்றிபெற இடமளிக்கப்பட்டால், இன்று கினியில் நடைபெறும் நிகழ்ச்சி நாளை ஆபிரிக்காவின் மற்ற நாடுகளிலும், உலகின் மிஞ்சிய பகுதிகளிலும் நடைபெறும்.

கினி மக்கள் தமது போராட்டத்தில் எந்த வகையிலும் தனிமைப்பட்டு நிற்கவில்லை. சீன மக்கள் அவர்களை உறுதியாக ஆதரிக்கின்றனர். தமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி விழிப்புணர்வை அதிகரித்து, ஜனாதிபதி சேகு தோரேயின் தலைமையின் கீழ் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கினி மக்களுக்கே இறுதி வெற்றி சொந்தமானது.

# அமெரிக்க மக்கள்

## கொதித்தெழுகிறார்கள்

வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவும், அமெரிக்க ஏகாதிபத்தியத் தலைவன் நிக்ஸனுல் இந்தோசீனம் சம்பந்தமாக சமீபத்தில் தயாரிக்கப்பட்ட ''புதிய சமாதான முயற்சி''க்கு தங்கள் வெறுப்பைத் தெரிவிப்பதற்காகவும் அமெரிக்க மக்கள் பலவிதமான முறைகளில் தங்கள் போராட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறுர்கள்.

நடைபெற்ற இடைக்காலக் காங்கிரஸ் தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பிற்போக்கு அரசியல்வாதிகளுக்கு வாக்குப் பொறுக்குவதற்கென சுற்றுப்பயண இயக்கம் ஒன்றை அமெரிக்கா முழுவதும் நிக்ஸன் மேற்கொண்டிருந்தான். ஆனுல் எங்கெங்கு இந்த ஆக்கிரமிப்பு யுத்தப் பேய் சென்றிருந்ததோ அங்கெல்லாம் ஆட்சேபமும், எதிர்ப்புமே வரவேற்பாகக் கிடைத்தன. யூ. பி. ஐ. என்னும் அமெரிக்க பூர்ஷுவா நியூஸ் ஏஜென்ஸி, நிக்ஸன் தங்கிய இடமெல்லாம் அவனை எதிர்ப்பதற்கென ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுமியிருந்தார்கள் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறது.

ஒக்டோபர் 17ம் திகதி வேமொன்ட்டிலுள்ள பேர்லிங்டன் என்னும் விமான நிலையத்தில் நிக்ஸன் தலைக்கவசம் அணிந்திருந்த தேசிய காவல் படையினர் மத்தியில் இருந்து உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது அங்கு குழுமியிருந்த மக்கள் ''போரை நிறுத்து,'' ''மக்களுக்கு அதிகாரம் வேண்டும்'' என்று உரத்த குரல் எழுப்பினர். நியூ ஜேர்சேயில் ரெரேர்பொரோ என்னும் இடத்தில் அவன் பேசும் பொழுது மண்டபத்திற்கு வெளியே குழுமி நின்ற மக்கள், ''தென் வியட்னுமிய தேசிய விடுதலை முன்னணியே வெற்றி அடையும்'' என்று கோஷமிட்டனர். வியட்னுமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பாளர்க்கெதிராக ஆட்சேபம் தெரிவித்த அவர்கள் வியட்னுமியரின் நியாயமான போராட்டத்திற்கு தங்கள் ஆதரவையும் தெரிவித்தனர். ஒசன் குரேவ் என்னும் வேறேரிடத்தில் 100க்கு மேற்பட்ட வாலிபர்கள் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிராகச் சுலோகங்கள் கோஷித்தார்கள்.

விஸ்கொன்சின் என்னும் இடத்தைச் சேர்ந்த கிறீன் பேயில் நிக்ஸன் வந்திறங்கியதும் கோபம்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை வரவேற்கக் காத்து நின்றனர். அங்கு அவனுடைய பேச்சு அவர்களின் ஆத்திரம் நிறைந்த குரல்களிடையே அமிழ்த்தப்பட்டுவிட்டது. ''சமாதானமே தேவை'' என்று பல நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கோஷித்தனர்.

ஒக்டோபர் 19ம் திகதி ஒஹியோ ராஜ்ய பல்கலைக்கழகத்திற்கு சில நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு நிக்ஸன் சென்றுன். அங்கு அவன் வந்து இறங்கினவுடனேயே மாணவர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டான். ஒரு வாலிப மாணவன் அவனை அணுகி ''ராணுவத்தில் சேர்க்கும் எனது கார்ட்டை எடுத்துக்கொள்'' என்று கூறினுர்.

நிக்ஸனின் ''புதிய சமாதான முயற்சி''க்கெதிராக அமெரிக்காவின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறுர்கள். நிக்ஸனின் இந்த முயற்சியை பல நேர்-எதிர்ப்பு இயக்கங்கள் ''வாக்குகளை வெல்வதற்காக புதிய புட்டியில் அடைக்கப்பட்ட பழைய பழரசம்'' என்றும் ''நிக்ஸனின் முடிவற்ற இந்தப் போர் முடிவற்ற கொலைகளுடன் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும்'' என்றும் கூறுயிருக்கின்றன.

# அமெரிக்காவில் வேலையில்லா

# திண்டாட்டம் பெருகுகிறது

வாஷிங்டனில் இருந்த வெளியான ஒரு அறிக்கையின்படி அமெரிக்காவின் பொருளாதாரக் குழப்ப நிலை மேலும் அதிகமாகி வரும் அதேவேளையில், கடந்த ஏழு வருட காலத்தில் சென்ற செப்டம்பர் மாத வேலையற்ருேர் தொகை மிக உயர்ந்திருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை நிக்ஸன் ஆட்சியை மேலும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்கிறது.

அமெரிக்க தொழில் இலாகாவினுல் பலரும் அறிய குறைத்து அனுப்பப்பட்ட ஒக்டோபர் 2ம் திகதிய எண்ணிக்கையின்படி செப்டம்பர் மாதம் வேலையற்ருேர் தொகை 43 லட்சமாகும். இது ஆகஸ்ட் மாதத் தொகையை விட 13 லட்சம் கூடியதாக இருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையற்ருேர் தொகை வேலையில் ஈடுபட்டிருப்போர் தொகையில் 5.5 சதவீதமாகும். நிச்சாட் நிக்ஸன் பதவியேற்ற காலத் 3.3 சதவீதத்தை விட இந்தக் தொகை முறையான அளவு உயர்ந்திருப்பதுடன் 1966 ஜனவரிக்குப் பின்பு இதுவே மிகவும் அதிகமான சதவீதமாகும்.

அமெரிக்காவில் பாடசாலைகளின் புதிய ஆரம்பத்தவணைகள் செப்டம்பர் மாதத்திலேயே தொடங்குகின்றன. இதனுல் இம் மாதத்தில் வேலை தேடுவோர் தொகை வழக்கமாகக் குறைந்ததாகவே காணப்படும். ஆனுல், செப்டம்பர் மாதம் வேலைதேடுவோர் வீழ்ச்சியைக் கணக்கில் எடுக்காமல் கணித்திருந்தால் வேலையற்ருேர் தொகை உயர்ச்சி 3 லட்சத்து 75 ஆயிரம் ஆகும். 21—24 வயதுள்ளோரிடையே வேலையற்ருேர் தொகை 8.1 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இது 1961 ஜுலை மாதத்திற்குப் பின்பு உள்ள உயர்ந்த சதவீதமாகும். இந்த நிலை நிக்ஸன் ஆட்சியின் மேல் வாலிபர்களிடையே நிலவும் கடும் அதிருப்தியை மோசமாக்குவதுடன் அங்கு சூழ்ந்துள்ள அரசியல் குழப்ப நிலையை நிச்சயமாக ஆழமாக்கவே செய்யும்.

வேகமாக வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் அமெரிக்க ஆளும் வட்டாரத்திடையே உள்ள முரண்பாடுகளைக் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறது. இதனுல் குழப்பமுற்ற அமெரிக்க ஏகாதிபத்தியத் தலைவன் நிக்ஸன் தனது ஸ்பெயின் விஜயத்தின் போது, வேலையற்ருேர் தொகை உயர்வு அறிக்கை பற்றி அறிவதற்காக அவசர அவசரமாக ஜனாதிபதியின் ''பொருளாதார ஆலோசனைச் சபையி''யின் தலைவனை போல் மக்கிறக்கென்னுடன் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்ட பின்பு, அமெரிக்கப் பொருளாதாரம் ''இன்னும் சரியான பாதை''யிலேயே செல்கிறது என்பதை ''வலியுறுத்த'' மக்கிறக்கென் ஓர் பத்திரிகை மகாநாடு நடத்தினுன். ஆனுல் ''வேலையற்ருேர் தொகை வீழ்ச்சியடைவதற்கு முன்பு இன்னும் சில படிகள் அதிகமாக உயர வேண்டியிருக்கும்'' என்பதை அவன் ஏற்க வேண்டி இருந்தது.

# உலக வியாபகம்

## சிறுகதை

"சாத்தான்களை அழிப்பதென்பது கடினமானது; மிகக் மிகக் கடினமானது. இன்று அவை அழிந்ததுபோல் இருக்கும், ஆனுல், அந்தக் கணத்திலிருந்தே அவை புத்துயிர் எடுத்து சில கணவேளைக்குள்ளேயே முழுமை பெற்றுவிடும். எனவே, சாத்தான்களை அழிப்பதற்கான போராட்டம் – கடைசிச் சாத்தான் அழியும் வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டும்."

பேதிருப்பிள்ளைப் பாதிரியார் பிரசங்கக் கூட்டிலிருந்து இறங்கும்போது கடைசியாக இந்த வார்த்தைகளைத்தான் பேசிவிட்டு இறங்கினுர்.

'சந்தியாக்கோவுக்கு உடம்பெல்லாம் வெடவெடுத்து வியர்த்துக் கொட்டியது. பாதிரியார் யாரைப்பற்றி இப்படியெல்லாம் பேசுகிருர் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. தன்னையாரும் கவனித்து விடுவார்களோ என்று அவன் நினைத்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான். கூட்டத்திலிருந்த அத்தனைபேரும் சந்தியாக்கோவையே, சுற்றிச் சூழன்று பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் அவனை பச்சாதாபத்தோடு பார்த்தனரா?

* * *

நான்கு நாட்களுக்கு முன் பாதிரியாருக்கும், சந்தியாக்கோவுக்கும் நீண்டதொரு விவாதம் நடந்தது. அந்த விவாதத்தின்போது பாதிரியார் சந்தியாக்கோவுடன் மிகவும் ஆவேசத்துடன் பேசினுர்.

"வத்திக்கானில் வீடில்லாதவர்கள்; உணவில்லாதவர்கள் கிளர்ச்சி பண்ணுகிருர்கள் என்று ஊரெல்லாம் பிரசாரம் செய்கிருயாமே?"

"நானுகச் செய்யலேங்க சுவாமி, பத்திரிகையிலே போட்டிருக்கெண்டு சொன்னேன்."

"பத்திரிகையிலே போட்டிருந்தா உனக்கென்ன? அதை நீ ஏன் சொல்லவேணும்?"

"இந்த ஊர்லே இருக்கிறவங்க எல்லாம் வத்திக்கான் மோட்ச ராச்சியம் என்று நம்பியிட்டிருக்கிங்க, அதனுலே சொல்ல வேண்டியிருக்கு!"

"நீ தான் ஊரிலே பெரிய மனுஷனே? படிச்ச மனுஷனே?"

"அப்படி நான் சொல்லேல்லையே!"

"நீ ஊர் மக்களைப் பசாசின் பக்கமாக இழுத்திட்டுப் போருய்?"

"நீங்க அப்படி நினைக்கிறீங்க!"

"நீ ஊருக்கே பெறுமதியில்லாதவன்; உனக்கென்று ஒரு வீடில்லை; நிலமில்லை; சொத்துச் சுதந்திரமில்லை!"

"இதனுலேதான் வத்திக்கானிலே இருக்கிற வீடில்லாதவங்களை நிலமில்லாதவங்களை என் கண்ணுக்குத் தெரியுது!"

"நீயாக நரகத்தைத் தேடிக் கொள்ளப் போகிருய்?"

"நான் அப்படி நினைக்கல்லே!"

"ஊரிலே இருந்து உன்னை விரட்டி அடிச்சாத்தான் உனக்குப் புத்திவரும்!"

"..................."

"..................."

* * *

சந்தியாக்கோவுக்கு "தாய்" என்ற உறவில் ஒரு கிழவி மட்டுந்தான் வீட்டோடு.

அறிவு அறிந்த காலத்திலிருந்து படிக்கத் தொடங்கி, பதின்மூன்ருவது வயது முடிய ஐந்தாம் வகுப்பு வரை படித்து தீர்த்துவிட்ட பின்பு, முப்பதாவது வயதுவரை மாதா கோவிலுக்கு வரும் பாதிரிமார்களுக்கு நிரந்தரப் பணியாளாக இருந்து வந்தான். சந்தியாக்கோவின் தாய் பிரசவ வேதனையால் அவஸ்தைப்பட்டு குழந்தையைப் பிரசவித்தபோது, மருந்துவச்சி தொப்பிள் கொடியைத் தவருக வெட்டி விட்டதனுல் ஏற்பட்ட நோயிலிருந்து விடுபட கீழ்க்காணும் விதத்தில் தாய் நேர்த்திவைத்துக் கொண்டாள்.

"இவனை குருக்களின் திருப்பணிக்குக் கொடுப்பேன்."

முப்பது வயதுவரை அந்தத் திருப்பணியை நடத்திக் கொண்டிருந்த போது ஒரு நாள்.........

அன்னம்மாளின் வீட்டில் கூக்குரல் கேட்டது.

கூக்குரல் சத்தத்திற்கு யாருமே செவிசாய்க்க வில்லை?

அன்னம்மாள் ஒழுக்கம் கெட்டவள்; விபசாரி; திருச்சபையால் ஒதுக்கி வைக்கப்பட்டவள்.

கூக்குரல் சத்தத்திற்கு சந்தியாக்கோ ஓடினுன். முடமான அவளின் கணவன் ஆனவன் செத்துப்போய் விட்டான். அன்னம்மாளும் அவள் குழந்தை குட்டிகளும் ஓடோடி வந்து அவன் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினுர்கள்.

சந்தியாக்கோவின் மனச்சாட்சி அவனைப் பிய்த்தெடுத்தது. அவர்களோடு சேர்ந்து அவனும் கண்ணீர் விட்டான்.

சந்தியாக்கோ பாதிரியாரிடம் ஓடினுன். இந்த வேளை அன்னம்மாளுக்குக் கை கொடுத்துதவக் கேட்டான். பாதிரியாரோ திருச்சபைக்கு எதிராக ஒரு அடிதன்னும் எடுத்துவைக்க மறுத்து விட்டார். அது மட்டுமல்ல சந்தியாக்கோவையும் தடுத்து விட்டார்.

முதல் வாரப் பிரசங்கத்தில்.........

"ஊமையனுக்காவும், திக்கற்ற சகலருடைய நியாயங்களுக்காகவும் உன் வாயைத் திற" என்ற கர்த்தரின் வாக்கியத்தை வைத்துத்தான் பாதிரியார் நீண்டதொரு பிரசங்கம் செய்திருந்தார். ஆனுல், இப்போதோ......

சந்தியாக்கோ இந்தப் பிரசங்கத்தை எண்ணிப்பார்க்கிருனே இல்லையோ அன்னம்மாள் வீட்டை நோக்கி மீண்டும் ஓடினுன்.

சந்தியாக்கோவின் உதவியுடன் அந்த விபசாரி வீட்டுச் சடலம் வெளிப்புறப் பிரேதக் காலையில் நல்லடக்கம் பெற்றது.

இந்த நாளிலிருந்து சந்தியாக்கோ தன்னைச் சுற்றி எண்ணத் தலைப்பட்டு விட்டான்.

### "கதிரவன்"

ஆனுலும், ஊரின் உறவுகளும், முன்னைய திருப்பணிகளும் அவனைப் பிடித்தே வைத்துக் கொண்டிருந்தன.

* * *

அந்தப் பாதிரி மாற்றலாகத்தான் பேதிருப்பிள்ளைப் பாதிரியார் வந்து சேர்ந்தார்.

"பாவிகளை மனம் திரும்ப வைக்கவே நான் வந்திருக்கிறேன்" என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிக்கொண்டு வந்த பாதிரியார் சந்தியாக்கோவின் மனம் திரும்புவதற்காகவும் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு பல ஆண்டுகளைக் கடத்திவிட்டார். ஆனுல், சந்தியாக்கோவோ ஊருக்குள் உள்ளவர்களிடம் சரியாக நிலைத்துக் கொண்டு தன் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தான்.

தேர்தல் வந்தபோது பாதிரியார் சந்தியாக்கோவை அழைத்து தேர்தலில் யாருக்காகவோ வேலை செய்யும்படிக் கேட்டார்.

"இதெல்லாம் ஒருவித பைத்தியக்கார வேலை சுவாமி, துண்டுபோட்டு ஏழை மக்களுக்கு வாழ்வு தேடமுடியாது சுவாமி" என்று மொட்டையாகவே பதில் கூறிவிட்டான்.

தேர்தல் முடிந்த பின் ஒரு நாள் பாதிரியார் சந்தியாக்கோவிடம் பேசினுர்.

"சந்தியாக்கோ உனது கட்சிக்காரர் தான் வந்திருக்கிருர்கள்; இவர்கள் மிச்சம் நல்லவர்கள்; படிப்பாளிகள்: ஏழைகள் மேல் இரக்கம் கொண்டவர்கள் இவர்களை விசுவாசி" என்று சுற்றிவளைத்துப் பேசினுர்.

"எதிரி எதை விரும்புகிருனே அது உனக்கு எதிரானது." என்று சமீபத்தில் படித்தது அவன் நினைவுக்கு வந்தது, அதனுல் அவன் பாதிரியாருடன் அதிகமாகப் பேசவில்லை; வந்துவிட்டான்.

* * *

இவை எல்லாவற்றையும் சந்தியாக்கோ நிரைப்படுத்தி நினைத்துக் கொண்டே, எங்கெல்லாமோ சுற்றி விட்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

அவன் உள்ளே போன போது, "சந்தியாக்கோ" என்ற இதமான அழைப்புக் கேட்டது.

இதைச் சந்தியாக்கோ எதிர் பார்க்கவில்லை. பாதிரியார் முற்றத்தில் இருந்தார். தாய் கிழவி அவர் பாதத்தில் வீழ்ந்து அழுது கொண்டிருந்தாள்.

"சந்தியாக்கோ அருகே சென்ருன்.

"சந்தியாக்கோ நீ இந்தக் கிழவியையும் நரகத்தில் தள்ளப் பார்க்கிருய்!"

சந்தியாக்கோ பேசவில்லை.

"சந்தியாக்கோ நீ கெட்டழிந்துபோகாதே; அரச விரோதியாக இருக்காதே!"

"................."

"சந்தியாக்கோ ஊரின் அமைதியைக் கெடுக்காதே; ஊர் மக்களை நரகத்துக்கு இழுத்துச் செல்லாதே!"

"................"

முன்னே தொங்கிக் கொண்டிருந்த படத்தை சுட்டிக் காட்டி "சந்தியாக்கோ சீனத்திலிருக்கும் இவன் ஒருவனுக்குப் பின்னுல் நிற்காதே! அவனுல்தான் வத்திக்கான் மக்களும் திசைமாறிப் போகிருர்கள்! உலகமும் திசைமாறிப் போகிறது!"

"ஆமாம் சுவாமி, சரியாகச் சொன்னீர்கள்!" சந்தியாக்கோ இதை மட்டும்தான் பேசினுன். மௌனமாக நின்ருன்.

இருட்டிக் கொண்டு வந்தது. பாதிரியார் மாதா கோவிலை நோக்கி நடந்தது கொண்டிருந்தார்.

கிழவி இன்னும் முற்றத்தில் அழுது கொண்டுதான் இருந்தாள்.

"முதலாளித்துவத்தை அழிப்பதென்பது கடினமானது. இன்று அது அழிந்தது போல் இருக்கும்; ஆனுல், அது வலுவில் சாவதில்லை. எனவே அதை அழிப்பதற்கானபோராட்டம் தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும்."

இரவு குப்பி வெளிச்சத்தில் சந்தியாக்கோ படித்துக் கொண்டிருந்த போது இந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் படித்தான்.

காலை பாதிரியார் வைத்த பிரசங்கத்தையும் இதையும் இவன் ஒப்பிட்டுப் பார்த்தான்.

"ஒருவேளை சுவாமியும் இதைப் படிக்கிருரோ?" என்று மயக்கமும் அவனுக்கு வந்தது.

"சில சந்தர்ப்பங்களில் எதிரிகள் பேசுவதும், நாம் பேசுவதும் ஒன்றுபோலத் தோன்றும்........."

இந்தத் தொடர்பில் முன்பு படித்த ஞாபகம் வரவே அந்தப் பகுதியை விரைவாகப் புரட்டிக் கொண்டிருந்தான் சந்தியாக்கோ.

## புது வாழ்வு பெற்றிடுவார்

(நாதஸ்வர ஓசையிலே.....என்ற மெட்டு)

அல்பத்தாவின் பாதையிலே
அரபு மக்கள் திரளுகின்ருர்
அடிமைத்தனை உடைத்தெறிய
ஆயுதங்கள் ஏந்துகிருர்.

பாலைவன மணலையுண்டும் பாலஸ்தீனை மீட்போமென்றே
சியோனிஸ விலங்கொடிக்க ஆயுதங்கள் ஏந்துகிருர்
களத்தினிலே எதிரிகளை காகிதப்புலியாக்கி விட்டே
எழுச்சியுற்ற அரபு மக்கள் இஸ்ரேலை அழித்திடுவார்
(அல்பத்தாவின்)

நீர் வடித்த கண்களிலே நெருப்புமிழ எழும்புகிருர்
போர் முடித்து சியோனிஸத்தை புதைகுழிக்கு
அனுப்பிடுவார்
வெறி பிடித்த வெள்ளையரின் வேட்டைகளை
அமிழ்த்திடுவார்.
சொறி பிடித்த காவல் நாய்கள் சுரண்டலையும்
அழித்திடுவார்
(அல்பத்தாவின்)

முழு குமுறுகின்ற எரிமலையாய் கொந்தளிக்கும்
பெருங்கடலாய்
அமெரிக்காவின் சுரண்டலையும் அழித்தொழிக்க
அணிதிரண்டு
பார் முழுதும்எழுமக்கள் பாலஸ்தீனை வாழ்த்துகின்ருர்
போர்முடிவில் அரபுமக்கள் புதுவாழ்வு பெற்றிடுவார்.
(அல்பத்தாவின்)

தலையங்கம்

## நட்புறவுக்குப் பாதகமான செயல்

"மீனவனின் பாதணிகள்" என்ற ஆங்கில திரைப்படம் மெஜெஸ்ட்டிக் தியேட்டரில் காட்டப்படுகிறது. இப் படம் மக்கள் சீனக் குடியரசையும், சீன மக்களையும் நிந்திக்கிறது.

இந்தப் படத்தை இலங்கையில் திரையிட அனுமதித்ததன் மூலம் திரைப்பட தணிக்கைச் சபையிலுள்ள பிற்போக்குவாதிகள் இலங்கை - சீன நட்புறவுக்கு பலமான அடியைக் கொடுத்துள்ளார்கள்.

இலங்கைக்கு பெருமளவில் உதவி செய்து வரும் நாடு மக்கள் சீனம். 1952ல் கைச்சாத்திடப்பட்ட ரப்பர் - அரிசி ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் சீனம் இலங்கைக்கு பெரும் உதவிகள் செய்து வருகிறது. இலங்கைக்கு வட்டி இல்லாமல் கடனுதவி செய்யும் ஒரேயொரு நாடு மக்கள் சீனம். முக்கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின் மக்கள் சீனம் தனது உதவியை அதிகரித்துள்ளது. கொடுக்கப்படும் மேலதிக அரிசியை அது அளித்து வருகிறது. மேலும், வட்டி இல்லாமல் 2 கோடி ரூபாய்களை இலங்கைக்கு கடனாக அளித்துள்ளது. அத்தோடு, 3 கோடி 50 இலட்சம் ரூபாய்கள் செலவிட்டு பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தை அன்பளிப்பாகக் கட்டித் தருகிறது.

மக்கள் சீனத்தின் இத்தகைய சுயநலமற்ற உதவிகள் இலங்கை மக்களினதும், சீனமக்களினதும் நட்புறவை மேலும் வளர்ந்தோங்கச் செய்கிறது.

இந்த நிலையில், மக்கள் சீனத்துக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளின் ஆங்கிலத் திரைப்படத்தைக் காட்டுவது இலங்கை-சீன நட்புறவுக்கு பங்கம் விளைவிப்பதாகும்.

இப்படத்தை திரையிட அரசாங்கம் அனுமதித்தது ஏன்?

இதற்கு அரசாங்கம் கூறும் பதில் என்ன?

இலங்கையிலுள்ள மக்கள் சீன தூதுவராலயத்தின் சீன திரைப்படத்தை, அரசாங்கம் தணிக்கைச் சபையின் கத்திரிக்கோலுக்கு இரையாக்கிய பின்தான் காட்டப்பட வேண்டும் எனக் கூறி அனுமதிக்கவில்லை. அதற்கு சீன தூதுவராலயம் சம்மதிக்கவில்லை. அது நியாயமானது. இலங்கை மக்களுக்கு சீன திரைப்படத்தைக் காணும் வாய்ப்பு தடுக்கப்பட்டது.

இந்த முறையில்தான் நட்பு நாடான மக்கள் சீனத்துக்கும், அதன் தன்னலமற்ற உதவிகளுக்கும் முக்கூட்டணி அரசாங்கம் மதிப்பளிக்கிறதா? வார்த்தைகளைவிட செயல், நோக்கத்தை அம்பலப்படுத்துகிறது.

மக்கள் சீன குடியரசும், சீன மக்களும் இலங்கை மக்களின் உண்மையான நண்பர்கள்; இந்த நட்பு மேலும் மேலும் உறுதிப்பட வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகிறார்கள். எனவே, இலங்கை - சீன நட்புறவுக்கு பங்கம் விளைவிக்கும் இத்தகைய செயல்களை வெறுக்கிறார்கள். அனுமதிக்கவும் மாட்டார்கள்.

## போப்பின் வருகைக்கு . . . . .

◎ 1-ம் பக்கத் தொடர்

படுவோம் என்று தெரிந்தும், இந்த அரசாங்கம் இந்த கேலிக் கூத்துக்கு ஒழுங்கு செய்ததற்கு காரணம், வெகு ஜனங்களின் எழுச்சி பெற்று வரும் புரட்சிகர உணர்வுக்கு அஞ்சியதுதான். தன்னால் முடிந்த வரை எந்தவிதமான மத வேதாந்தத்தையும் மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் எழுச்சி பெற்றுவரும் புரட்சிகர இயக்கத்தை அது மூழ்கடிக்க முயல்கிறது.

வெகுஜனங்கள் முற்று முழுதாக ஏமாற்றப்படவில்லை என்பது எமக்கு சிறிது உற்சாகத்தை அளிப்பதாயுள்ளது. பெருமளவு பிரச்சார தந்திரம் கையாளப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பத்து லட்சம் பேர் வரவில்லை. விசேஷ இ. போ. ச. பஸ்கள் பெரும்பாலும் அரை வாசி காலியான நிலையிலேயே ஓடின. இறுதியில், எதிர்பார்த்ததிலும் பார்க்க அரைவாசிக்கும் குறைவாகவே அங்கு பிரசன்னமாக இருந்தனர்.

ஆனால், பெரிய பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது. இந்தப் பெரிய செலவுத் தொகையை யார் கணக்கில் எழுதுவது? அது எவ்வளவு?


தொழிலாளி

புதிய சந்தா

| | ரூ. ச. |
|---|---|
| 1 வருடம் | 12-00 |
| 6 மாதம் | 6-00 |
| 3 மாதம் | 3-00 |
| தனிப்பிரதி | 15 |

நிர்வாகி:
"தொழிலாளி"
123, யூனியன் பிளேஸ்
கொழும்பு - 2


# இந்திய மக்களை படுகொலை செய்யும் இந்திராவின் ஆட்சி

இந்திரா காந்தியின் இந்திய அரசாங்கம் ஜனநாயகம், அகிம்சை என்ற போலி முகமூடியை அணிந்துகொண்டு, இந்திய உழைக்கும் மக்களை படுகொலை செய்யும் பாசிச சுயரூபம் அம்பலமாகி விட்டது. மேற்கு வங்காளத்தில் நீசத்தனமான படுகொலைகளை இந்திரா காந்தியின் அரசாங்கத்தின் காவல்நாயான பொலிஸ் ஈவிரக்கமின்றி நடத்துகிறது.

கடந்த சில நாட்களுக்குள் 93 பேர் பொலிஸினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதைவிடக் கேவலமான எந்தவொரு அரசும் வெட்கித் தலைகுனிய வேண்டிய கோர நிகழ்ச்சிகள் மேற்கு வங்காளத்தில் பொலிஸினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளத்திலுள்ள 24-பர்கானா மாவட்டத்தில் பர்சாத் என்னுமிடத்தில் சாலை ஓரங்களில் கைகள் பின்புறம் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் 11 சடலங்கள் சிதறிக் கிடந்தன. இச் சடலங்களில் மிக அண்மையிலிருந்து-நேருக்கு நேர் நின்று துப்பாக்கியால் சுடப்பட்ட காயங்கள் இருந்தன.

இப்படி அநியாயமாக பொலிஸினால் சுடப்பட்டுசாலை ஓரத்தில் வீசப்பட்டிருந்த 11 பேரும், 21 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட இளம் வாலிபர்கள். சுரண்டலிலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுபட்ட புதிய வாழ்வைக் காணத் துடித்த இந்த இளம் இதயங்கள் காந்தியத்தின் பெயரால் மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டன.

இந்திரா காந்தியின் ஏகாதிபத்திய சார்பு, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ அரசின் அடக்கு முறைகளிலிருந்தும், சுரண்டலிலிருந்தும், பஞ்சம், பசி, பட்டினியிலிருந்தும், நிலப்பிரபுத்துவ கொடுமைகளிலிருந்தும் விடுபட போராடக் கிளர்ந்தெழும் மக்களை, இந்திராவின் அரசு கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்கிறது. இது இன்று இந்தியாவில் சர்வ சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

அதேவேளை, இந்திரா காந்தியின் அடக்குமுறை அரசு இயந்திரத்தைத் தகர்த்தெறியும் துப்பாக்கி வேட்டுக்களை இந்திய உழைக்கும் மக்கள் பொழிய ஆரம்பித்து விட்டார்கள்.

## பலாங்கொடை

அண்மையில் பலாங்கொடை மாவட்டத்திலுள்ள வேவாவத்தை, நல்வலை தோட்டங்களில் செங்கொடி சங்கத்தின் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களுக்கு முன் பல தோட்டங்களைச் சேர்ந்த செங்கொடி சங்கத்தின் அங்கத்தவர்களும், சிங்கள விவசாய மக்களும் புரட்சிகர கோஷங்களை முழக்கி ஊர்வலம் வந்தனர்.

செங்கொடி சங்கத்தின் உபதலைவர் தோழர் ரொசாரியோ பெர்ணண்டோ பேசுகையில், இந்நாட்டு தொழிலாளர் வர்க்கமும், மற்றும் சிங்கள ஏழை விவசாயிகளும், ஏனைய இனத்தைச் சேர்ந்த ஏழை மக்களும் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளாலும், பெரும் முதலாளிகளாலும், நிலப்பிரபுக்களாலும் சுரண்டப்படுகிறார்கள். இதிலிருந்து அவர்கள் விடுதலை அடைய வேண்டுமானால் இந்த சுரண்டல்காரர்களுக்கு எதிராக சகல மக்களும் ஐக்கியப்பட்டு புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடவேண்டும் என்றார்.

பலாங்கொடை மாவட்டப் பிரதிநிதி தோழர் எஸ். பி. வெங்கடாசலம் பேசுகையில், இந்நாட்டைச் சுரண்டுவது அந்நிய முதலாளிகளாயினும், சரி, உள்நாட்டு முதலாளிகளாயினும் சரி இவர்கள் அனைவரும் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. இந்த சுரண்டும் வர்க்கத்துக்கு தலைவனான ஏகாதிபத்தியமும் நம்நாட்டைச் சுரண்டுகிறது. இந்தச் சுரண்டலிலிருந்து விடுபட ஒரேயொரு மார்க்கம்தான் உண்டு. பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனை காட்டும் ஒளிமிக்க புரட்சிகரப் பாதையில் போராட வேண்டும். இப்போராட்டத்தில் பங்கு கொள்ள தோட்டத் தொழிலாளர்கள் செங்கொடி சங்கத்தின் தலைமையில் அணிதிரள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## செங்கொடி சங்கச் செய்திகள்

மற்றும், இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தோழர் மோஹன், பலாங்கொடை உப பிரதிநிதி தோழர் வி. கே. பெரியசாமி, தலவாக்கொல்லை மாவட்ட பிரதிநிதி தோழர் சுந்தரம் ஆகியோர் உரையாற்றினார்கள். தோழர் வி. கே. பெரியசாமி தொழிலாளர்களின் உணர்வைத் தூண்டும் பல புரட்சிகரப் பாடல்களைப் பாடினார்.

வேவாவத்தை தோட்டத் தலைவராக தோழர் ரத்தினமும், உபதலைவராக எஸ். செல்லத்துரையும், குரூப் கமிட்டி தலைவராக தோழர் பி. சின்னையாவும், காரியதரிசியாக தோழர் ஏ. எம். தோமஸும், உபகாரியதரிசியாக தோழர் வீ. வீரையாவும், கலெக்டராக தோழர் ஏ. வேலும், மாதர் சங்கத் தலைவியாக தோழியர் ஏ. எம். அன்னம்மாள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். நல்வலை டிவிஷனுக்கு, தலைவராக தோழர் வெள்ளையனும், உபதலைவராக குமணயாவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

### டெனியாய

டெனியாய மாவட்டத்திலுள்ள நிசங்கவெளி தோட்ட நிர்வாகி தொழிலாளர்களை இம்சிப்பதோடு, தாக்கவும் முனைகிறார். தொழிலாளர்களை அடக்குவதில் ஈடுபட்டுள்ள இவர் மாஜி பாராளுமன்ற அங்கத்தவரும்கூட.

தொழிலாளர்களுக்கு கிழமைக்கு ஐந்துநாள் வேலை கொடுப்பதில்லை. பிறகு ஐந்து நாள் வேலை செய்யவில்லையெனக் கூறி மேலதிக அரிசியை 75 சதத்திற்கு கொடுக்கிறார் இல்லை. இக் கொடுமைகளை எதிர்த்து நிசங்கவெளி தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தில் சேர்ந்ததும், நிர்வாகியின் கெடுபிடி கூடியுள்ளது. செங்கொடி சங்கத்தைவிட்டு விலகுங்கள் எனக் கூறுகிறார். இதற்குத் துணையாக கம்புறுபிட்டி எம். பி. யான எலியன் நாணயக்காரா-இவர் ஒருதிரிபுவாதி—எமது சங்கத்தில் சேருங்கள் எனக் கூறுகிறார்.

நிசங்கவெளி தோட்டத் தொழிலாளர்கள் இவர்களின் தில்லுமுல்லுகளுக்குப் பயப்படாமல் செங்கொடி சங்கத்தின் தலைமையின் வீரப் போராட்டத்துக்கு தயாராகி வருகிறார்கள்.

* பொலிஸ் அடக்குமுறையைக் கண்டிக்கவும்;

* கட்டுபெத்த தொழில் நுட்பக் கல்லூரி பிரச்சினை சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் கோரியும்;

* மாணவர்கள், தொழிலாளர்கள் போராட்டங்களின்போது பொலிஸ் தலையீட்டை நிறுத்தக் கோரியும்;

## மாபெரும் பொதுக் கூட்டம்

டிசம்பர் 19ந் திகதி மாலை 3 மணிக்கு
ஹைட் பார்க்கில் நடைபெறும்

**ஊர்வலம்:**

கொழும்பு பல்கலைக் கழகத்தின் அருகிலிருந்து
பிற்பகல் 2 மணிக்கு புறப்படும்.

பல்கலைக் கழக, தொழில் நுட்ப கல்லூரி
மாணவர்களின் ஐக்கிய சங்கம்

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.